நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஐப்பசி 14 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றம்ழான் 05 (31.10.2003) வெள்ளிக்கிழமை இதழ் :31

IIS

புலமைப்பரிசில் திட்டம் 2004

கல்வியாண்டு 2004/2005 இல் புலமைப்பரிசில் திட்டம் 2004 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி : 15.11.2003

விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சீ-1675)

## தமிழரின் அரசியல் வரலாற்றில் முக்கிய நிகழ்வு

# புலிகளின் இடைக்கால நிர்வாக திட்டவரைபு

# நோர்வேத் தூதுவரிடம் இன்று கையளிப்பு!

## ஊடகங்களுக்கு நாளை விபரம் வெளியாகும்

(கிளிநொச்சி)

**தமிழீழ விடுதலைப் புலிகளால் இறுதிசெய்யப்பட்ட வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு, இன்று நோர்வே அரசின் ஊடாக, அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.**

**சர்வதேச சட்ட நிபுணர்களின் உதவியுடன், தமிழீழ விடுதலைப் புலிகளால் - பிரான்சிலும், அயர்லாந்திலும் இந்த இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு இறுதிசெய்யப்பட்டது.**

இன்று இந்த வரைபை அரசாங்கத்திடம் வழங்குவதற்காக, நோர்வே தூதுக்குழுவிடம் புலிகளால் கையளிக்கப்படவுள்ளது.

இதற்காக, இன்று காலை 7.30 மணிக்கு தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை, நோர்வே அரசுப் பிரதிநிதியாக, இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் சந்திக்கவுள்ளார்.

நாளை இந்த வரைபு ஊடகங்களுக்கு வெளியிடப்படவுள்ளதுடன், நாளை கிளிநொச்சியில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றையும் புலிகள் நடத்தவுள்ளனர்.

இதேவேளை, வடக்கு - கிழக்குக்கான உத்தேச இடைக்கால நிர்வாக அலகுக்கான விடுதலைப் புலிகளின் மாற்று யோசனைகள், இன்று பிற்பகல் அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் யோசனைகளைப் பெறுவதற்காக, இலங்கைக்கான நோர்வே தூதுவர் இன்று காலை கிளிநொச் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ரணில் நேற்று அமெரிக்கா பயணம்!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அமெரிக்காவுக்கான விஜயத்தை மேற்கொண்டார்.

பிரதமர் - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ச் புஷ் மற்றும் அந்நாட்டு உயரதிகாரிகளையும் சந்தித்து, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவாரென, அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்கும் இடை (10 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலவ்சனைப் பதவி நீக்கினால் சமாதான முயற்சியை பாதிக்கும்!

### நோர்வே தூதரகம் அறிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவரான ரெலவ்சனை பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்ற ஜனாதிபதியின் கோரிக்கையால் சர்வதேச கண்காணிப்பாளர்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என்று நோர்வே தூதரகம் தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரெலவ்சனின் நடுநிலை பற்றிச் சந்தேகம் எழுந்துள்ளதால், அவரைப் பதவியிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதி நோர்வேயின் பிரதமரைக் கேட்டிருக்கின்றார்.

இந்த வேண்டுகோள் குறித்தும், அதன் பின்விளைவு தொடர்பாகவும் சுவீடன், பின்லாந்து, ஜேர்மன், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுடன் கலந்தாலோசிக்க வேண்டியிருக்கிறது என, இலங்கைக்கான நோர்வே தூதுவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் போர்நிறுத்தக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலிப் பகுதியில் லான்ட்மாஸ்ரருடன் இராணுவ பஸ் மோதி இருவர் படுகாயம்!

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் வேகமாக வந்த இராணுவத்தினருடைய பஸ் வண்டி, லான்ட்மாஸ்ரர் ஒன்றுடன் மோதியதில் அருட்சகோதரி உட்பட இருவர் காயமடைந்தனர்.

அச்சுவேலி - பலாலி வீதியில் நேற்று நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், அமலிவனம் திருக்குடும்பத்தைச் சேர்ந்த அருட்சகோதரி கிறிஸ்ரினா, லான்ட்மாஸ்ரரின் சாரதி கே. விஜயன் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

அச்சுவேலி சந்தியிலிருந்து, பலாலி வீதியை நோக்கி வேகமாக இராணுவத்தினருடைய பஸ் வண்டி வருவதைக் கண்ட லான்ட்மாஸ்ரரின் சாரதி, அதை பாதையோரத்தில் நிறுத்தினார். ஆனால், கட்டுப்பாடிழந்த நிலையில் வேகமாக வநத இராணுவ பஸ்வண்டி லான்ட்மாஸ்ரரை (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை இறால்குழி பகுதியில் இரு தமிழர்கள் குத்திக்கொலை!

### அமைதிகாக்க கோருகிறார் சம்பந்தன் எம்.பி.

(திருகோணமலை)

திருகோணமலை இறால்குழியைச் சேர்ந்த இரண்டு தமிழ் வியாபாரிகள் நேற்று முன்தினம் 4.30 மணியளவில், மேற்படி இடத்தில் வைத்து இனந்தெரியாதோரால் கோரமான முறையில் கூரிய ஆயுதங்களினால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இறால் குழியைச் சேர்ந்த மார்க்கண்டு அழகையா (வயது-55) தம்பிராசா சுந்தரலிங்கம் (வயது-46) ஆகிய இருவருமே இருதயபுரம் சென்று மீளத்திரும்பிவரும் வழியில், இறால்குழியில் வைத்து இனந்தெரியாதோரால் கொலை செய்யப்பட்டனர்.

இவர்களது கொலை தொடர்பாக, மேற்கொண்ட மரண விசாரணையின்போது, ஆயுதங்களால் குத்திக்கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்வத்தினைக் கண்டித்து, திருகோணமலை மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளு (10 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள - தமிழ் கலைக் கூடலில் நேற்றும் சிஹல உறுமய தாக்குதல்!

### பொலிஸாரின் பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

சிங்கள - தமிழ் கலைக் கூடல் நிகழ்வின் இரண்டாவது நாளான நேற்று, சிஹல உறுமயவின் குண்டர்களது அச்சுறுத்தல் காரணமாக- நிகழ்வுக்கு பலத்தபாதுகாப்பு வழங்கப்பட்டது.

நிகழ்வில் கலந்துகொள்ள கொழும்பு வந்திருந்த கலைஞர்கள் பொலிஸாரின் பலத்த பாதுகாப்பின் மத்தியிலேயே புதிய நகர மண்டபத்துக்கு நேற்று அழைத்துச் செல்லப்பட்டனர்.

நகர மண்டபத்தினுள் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. நூற்றுக்கணக்கான பொலிஸார் கலகத் தடுப்பு ஏற்பாடுகளுடன் தயாராக இருந்தனர்.

நிகழ்வு ஆரம்பமானதும், நேற்று முன்தினம் இடம்பெற்றதுபோல, பெருமளவான சிஹல உறுமய குண்டர்கள் கற்களை வீசியும், எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியும் குழப்பம் விளைவிக்க முயன்றனர்.

ஆனால், பெருமளவில் குவிக்கப் பட்டிருந்த பொலிஸார் - நிகழ்வு நிறைவுபெறும்வரை சிஹல உறுமய குண்டர்களை நகர மணடபத்துக்குள் நுழையவிடாமல் தடுத்து பாதுகாப்பு வழங்கினர்.

கொழும்பில் நடைபெற்ற தமிழ்-சிங்கள கலைக்கூடல் நிகழ்வினைக் குழப்பும் முயற்சியில், ஈடுபட்டபோது, கைது செய்யப்பட்ட தமது கட்சி அங்கத்தவர்களை உடனடியாக விடுதலை செய்யக்கோரி, சிஹல (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நடைபெற்ற கலைக்கூடல் நிகழ்வில் குழப்பத்தை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக அரசினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்!

### உள்துறை அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில், ஏற்பாடு செய்யப் பட்டிருந்த தமிழ்-சிங்கள கலைக் கூடலில், குழப்பத்தினை தோற்றுவித்த அனைவருக்கும் எதிராக, கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று, உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

சிஹல உறுமயவும் மற்றுமொரு அரசியற்கட்சியும், ஒருசில ஊடகவியலாளர்களும், கலவரத்தின் பின்னணியில் இருந்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதென்றும் அவர் கூறினார்.

புகைப்படங்களை ஆராயும்போது, இந்த விடயம் வெளிப்படையாகத் தெரிகின்றது என்று கொழும்பில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் - படைத்தரப்பு இன்று மூதூரில் சந்திக்க ஏற்பாடு!

திருகோணமலை - மூதூர் யுத்த சூனியப் பிரதேசத்தில் இன்று மாலை 4 மணிக்கு படையினருக்கும் - புலிகளுக்குமிடையில், சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.

திருமலை மாவட்ட கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில், மாதாந்தம் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில், விடுதலைப் புலிகளின் தரப்பில் மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் ஆகியோரும், படைத்தரப்பில் திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தலைமையிலான குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்றைய சந்திப்பில், திருமலை மாவட்டத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலவரங்கள், அண்மைய தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு இடையேயான அசம்பாவிதங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞானப் போட்டிப் பரீட்சை

## நாளை ஆரம்பமாகின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்- வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் வருடாவருடம் நடாத்துகின்ற விஞ்ஞான போட்டிகளின் வரிசையில் இந்த வருடம் வினா - விடை எழுத்துப் போட்டி நாளை காலை 10 மணிக்கும், கட்டுரைப் போட்டி காலை 11.30 மணிக்கும் நடைபெறவுள்ளது. இந்தப் பரீட்சை யாவும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்திலும், வட இந்து மகளிர் கல்லூரி மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.


விஞ்ஞானப் பேச்சுப் போட்டி - எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பங்குபற்றும் மாணவர்களுக்குரிய அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதையும், அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத மாணவர்கள் அனைவரையும் அதிபரின் உறுதிப்படுத்திய கடிதத்துடன் குறித்த நேரத்திற்கு முன்பாக பரீட்சை மண்டபங்களுக்கு சமுகமளிக்கும்படியும், யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிப் பொதுச்செயலாளர் கு.திருக்குமரன் கேட்டுள்ளார்.

## வடமராட்சி மக்களுக்கான இலவச கண் பரிசோதனை

(வடமராட்சி)

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர், ஏ-9 பாதை திறக்கப்பட்டதையடுத்து வெளியிடங்களிலிருந்து வந்து மீளக்குடியேறிய வடமராட்சி மக்களுக்கான 16 ஆவது கண்பரிசோதனை - நாளைமறுதினம் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இந்தக் கண்பரிசோதனையில் தெரிவுசெய்யப்படும் சுமார் 200 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி 16 ஆம் திகதி மேற்படி வைத்தியசாலையில் வைத்து வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (130)



சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் தீபாவளி தினம் நடைபெற்ற விசேட நிகழ்வின்போது, ஓய்வுபெற்ற முகாமையாளர் க.விவேகானந்தராசா மங்கள விளக்கேற்றுவதையும், அதில் கலந்துகொண்டவர்களையும் காணலாம்.




பேராசிரியர் வி.கே.கணேசலிங்கத்தின் ஒரு பேராசியர் வாழ்க்கையும், கல்விச் சிந்தனையும் என்னும் நூல் அண்மையில் வெளியிடப்பட்டபோது, அதில் கலந்துகொண்டவர்களையும், செ.சதானந்தன் உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

## புத்தூர் மத்திய மருந்தகத்திற்கு புதிய கட்டடம்

(புத்தூர்)

புத்தூர் மத்திய மருந்தகத்திற்கென வாங்கப்பட்ட காணியில், புதிய கட்டடம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் - இக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது. இக்கட்டத்திற்கான நிதியை, சுகாதாரத் திணைக்களம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

# கியூடெக் நிறுவனத்தால் வீட்டுத் தோட்டப் போட்டி!

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் உயிர்ப்பூட்டல் குழுவினரால் மழைகாலத்தை முன்னிட்டு - வீட்டுத்தோட்டப் போட்டியும், பெரும்போகப் பயிர்ச்செய்கையும் இடம்பெறவுள்ளது. வீட்டுத் தோட்டப் போட்டியானது - குழுக்களாகப் பிரித்து 15 கிராமங்களில் இடம்பெறவுள்ளது. இவற்றிற்கான உள்ளீடுகளை கியூடெக் நிறுவனம் வழங்கியுள்ளது.

சிறுதானியப் பயிர்களுடன், நிரந்தரப் பயிர்களான தென்னை, முருங்கை மரங்களதும் நடுகையும் மேற்கொள்ளப்படுகிறது. இதன்மூலம், சுயவருமானத்தை ஈட்டுவதுடன், மர நடுகையையும் ஊக்குவிக்கும் நோக்கில் இத் திட்டம் இடம்பெற்றுவருகிறது.

20 பரப்புக்களில் பெரும்போக நெற்செய்கைக்கான உள்ளீடுகள்- குடத்தனை, பொற்பதி, மணற்காடு, நடுக்குடத்தனை ஆகிய கிராமங்களுக்கு வழங்கப்படவுள்ளது. இந்தக் கிராமங்களிலும் தென்னைமர நடுகையும் இடம்பெற்றுவருகிறது. இந்தச் செயற்பாடுகளை, கியூடெக் இணைப்பாளர் யோசப்பாலா, ஊக்குவிப்பாளர் மரியராசா ஆகியோர் முன்னின்று செயற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

## கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(திருநெல்வேலி)

திருநெல்வேலி - முடமாவடி ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினால், வடமாகாண ரீதியில் பூபாலசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் நான்குபேர், ஆறுபேர் பங்குபற்றும் (ஓவர்) கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று பங்குபற்றவுள்ள கழங்கள்- கலைமதி விளையாட்டுக் கழகம் (பி-புத்தூர்), எதிர் இளைஞர் விளையாட்டுக் கழகமும்,- திருநெல்வேலி, அம்பாள் விளையாட்டுக் கழகம் (சிவலைப்பிட்டி) எதிர் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் (உடுவில்) ஆகியன மோதவுள்ளன.

## நெல்லியடி மத்திய மகா வித்தியாலய வீதி விளக்குகள் பழுது

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதியில், வீதி விளக்குகள் இரவு வேளையில் ஒளிராத காரணத்தினால், பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதியில் - வீதி விளக்குகள் உள்ளபோதும், அவை பழுதடைந்து நீண்டநாட்களாகியும் திருத்தப்படாமல் இருப்பதாக, பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (116)

NATURAL HEALTH LINE
சித்த மருத்துவர்களின் சேவைகள்
- இயற்கை மூலிகை சிகிச்சை முறைகள்
- ஆயுர்வேத சித்த மருத்துவ சிகிச்சை
- பஞ்சகர்ம சிகிச்சை முறைகள்
- மற்றும் மருத்துவ ஆலோசனைகள் என்பன

நோயாளர் தங்குமிட வசதியுடன்
இன்றுமுதல்
சிகிச்சை நேரம் - தினசரி காலை 8 மணிமுதல் இரவு 9 மணிவரை - நிர்வாகி

Natural Health Line
(நாயன்மார்கட்டு முறிவு, நெரிவு வைத்தியசாலை)
262, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம். (517)

யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்
நிறுவுநர் நினைவுநாளும்
பரிசளிப்பு விழாவும் – 2003
காலம் : 01.11.2003 சனிக்கிழமை மு.ப 9.00 மணி
இடம் : கல்லூரி அரங்கம்.
தலைவர் : திரு.க.சிவாஜி (அதிபர்) அவர்கள்.

ஆசியுரை
அன்னை துர்க்கா துரந்தரி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர் ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை)

பிரதமவிருந்தினர்
கலாநிதி அ. சக்திவேல் அவர்கள்
(B.V.SC(Cey) Dip.Agric.Eco Reading U.K)

நிறுவுநர் நினைவுப் பேருரை
திரு. சி.செல்லையா அவர்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர், சங்கானைக்கோட்டம்)

பரிசில் வழங்கல்
திருமதி. கமலேஸ்வரி சத்திவேல் அவர்கள்

நிறைவுரை
திரு. சி.மகேந்திரன் அவர்கள்
(பகுதித்தலைவர் – ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

விழாவிற்கு சமுகமளித்துச் சிறப்பிக்கும்படி தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(519)

கண்ணீர் அஞ்சலி



புதிய ஆனந்தா நகைமாட உரிமையாளர்
அமரர் இ.றஜந்தன்
அவர்களின் திடீர் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

உரிமையாளர் (ஜனா)
நரீன் தளபாட நிலையம்,
273, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-1748)

நிறஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர் (இருவேடம்), சறோஜாதேவி நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
XXX
(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.
பிதாமகன்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-1619)

G.A.Q., 1st in Com.
யாழ்., பேராதனை (வெளிவாரி)
- இவற்றிற்குரிய பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் 3 பாடங்கள் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.
- இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
- பதிவுகள், நேர அட்டவணைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு: S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(சி.1747)

திருமண அழைப்பிதழ்கள்
Wedding Invitations
திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன.
ஆனால், அதன் அழைப்பிதழ்கள் இங்கேதான்
தெரிவுசெய்யப்படுகின்றன.
தெரிவுசெய்ய நீங்கள் நாடவேண்டிய இடம்.
Boasco Artone Printers
Offset & screen printing
252, [illegible] வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். T.P. 0777737438
இல.3, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# தேசப்பற்று முன்னணி நடத்திய சமாதான எதிர்ப்பு பேரணி!

(கொழும்பு)

தேசிய தேசப்பற்று முன்னணியின் இரண்டாவது தேசிய பேரணி - கடந்த செவ்வாய்க்கிழமை அனுராதபுரத்தில் நடைபெற்றது.

"தாய்நாட்டைப் பாதுகாக்க முன்னேறிச் செல்வோம்" என்ற கோஷத்துடன், நடத்திய இந்தப் பேரணி- அனுராதபுரம் சிறிமா போதியில் நடைபெற்ற சமய அனுட்டானங்களைத் தொடர்ந்து ஆரம்பமானது.

தாய்நாட்டைக் கூறுபோட முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளைத் தடுக்கவேண்டும் என்றும், தேசிய ஒற்றுமையை வலியுறுத்தவும், புதிய தேசிய பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட வேண்டுமென்றும், வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இலங்கையின் கலாசாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இந்தப்பேரணி நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் வண. எல்லே குணவன்தேரர், ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க, கலாநிதி குணதாஷ அமரசேகர, மங்களசமரவீர, டிலான் பெரேரா, அநுரா திஸநாயக்க, லால்கந்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களும், பௌத்த பிக்குகளும் கலந்துகொண்டனர்.

## நெதர்லாந்து அமைச்சரின் இலங்கை விஜயம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான தனது மூன்று நாள் விஜயத்தை, நவம்பர் மாத ஆரம்பத்தில் மேற்கொள்ளவிருந்த நெதர்லாந்தின் அமைச்சர் அக்னஸ் வன் ஆடென்ன- தனது பயணத்தைப் பிற்போட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - நவம்பர் மாதம் நான்காம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதாலேயே, இவரது விஜயம் பிற்போடப்பட்டதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரிலேயே, நெதர்லாந்தின் அமைச்சர் அக்னஸ்வன் ஆடென்ன- இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார்.

இவர் நெதர்லாந்து அரசின் சார்பில், இலங்கை அரசாங்கத்துடன் அபிவிருத்தி சம்பந்தப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இந்திய ரயில்வே அமைச்சருக்கு அநுரா அழைப்பு

(புதுடெல்கி)

ரயில் சேவைகள் தொடர்பாக இருதரப்பு ஒத்துழைப்புக்களை வலுப்படுத்துவதற்கு இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு இந்திய ரயில்வேத்துறை அமைச்சர் பசன்கௌடா ஆர்பட்டேலுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்கா அழைப்பு விடுத்துள்ளார்.



நேற்று முன்தினம் கொழும்பில் நடந்த தமிழ் - சிங்கள கலைக்கூடல் நிகழ்வில் சிஹலஉறுமய குண்டர்களின் தாக்குதலின் மேலும் சில காட்சிகள்.

## புரிந்துணர்வு உடன்பாட்டுக்குப் பின்னர் 3 லட்சத்து 16 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்தபின்னர் - உள்நாட்டில் இடம்பெயர்ந்த 3 லட்சத்து 16 ஆயிரம் பேர் - தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறியிருப்பதாகத் தெரியவருகின்றது.

புனர்வாழ்வு - அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சு விடுத்துள்ள உத்தியோக பூர்வ அறிக்கையிலேயே, இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த காலப்பகுதியில் இந்தியாவில் தங்கியிருந்த 3 ஆயிரத்து 301 அகதிகளும் நாடு திரும்பியுள்ளனர். இவ்வாறு சொந்தஇடங்களில் மீள்குடியமர்ந்துள்ள அகதிகளுக்கு, 15 ஆயிரம் ரூபா. முதல் 25 ஆயிரம் ரூபா வரையான கொடுப்பனவும், ஐம்பதாயிரம் முதல் 75 ஆயிரம் ரூபாவரையான வீடமைப்புக் கடன்வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

2002 ஏப்ரல் முதல் செப்ரம்பர் 2003 வரையான காலப்பகுதியில் 32 ஆயிரத்து 734 குடும்பங்களுக்கு மீள்குடியமர்வுக் கொடுப்பனவாக தலா ஒவ்வொரு குடும்பத்திற்குச் 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அகதிகள் தூதுவராலயத்துடன் இணைந்து, புனர்வாழ்வு அதிகள் மீள்குடியமர்வு அமைச்சு நடத்திய கணிப்பீட்டிலேயே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

## களவாக மன்னார் வந்த ஏழு இந்தியர்கள் கைது!

இந்தியாவிலிருந்து தலைமன்னாருக்குச் சட்ட விரோதமாக வந்த ஏழு இந்தியர்கள் - கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடி வள்ளங்கள்மூலம் தலைமன்னாருக்கு வந்த இவர்கள் - உறுமலை பேருந்து நிலையத்தில் தரித்து நின்றபோது, கடற்படையினரால் சந்தேகத்தின்பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இதன்போது, தாம் இந்தியர்கள் என அவர்கள் தெரிவித்ததையடுத்து, இந்த ஏழு பேரும் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட இவர்கள், தலைமன்னர் பொலிஸாரினூடாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நவம்பர் பத்தாம் திகதி ஆரம்பம்!

(கொழும்பு)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு எதிர்வரும் 10 ஆம் திகதி மாவீரர் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போட்டியில்- கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வீரர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழீழ விளையாட்டுத்துறையினரால் நடாத்தப்பட்டுவரும் தேசிய பெரு விளையாட்டுப் போட்டியின் 2004 ஆம் ஆண்டிற்கான போட்டிகள், பெப்ரவரி 20 இல் நடைபெறவுள்ளன.

கடந்த ஆண்டுகளில் நடைபெற்ற வெற்றிக்கேடயங்களுக்கான போட்டிகளுடன், கிளித்தட்டு, கபடி ஆகியன ஆண் - பெண் இருபாலாருக்கும் - கரப்பந்தாட்டம் பெண்களுக்கும் - தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் இணைத்து, கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்படவுள்ளது.

கேணல் சங்கர் வெற்றிக்கேடயத்திற்கான மென்பந்தாட்டப்போட்டி - இவ்வாண்டு கடினபந்து போட்டியாக நடாத்தப்பட்டுள்ளதாகத் தமிழீழ விளையாட்டுத்துறையினர் தெரிவித்தனர்.

இந்தப் போட்டி 3 ஆவது தேசிய பெருவிளையாட்டுப் போட்டியாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதான சூழல் குறித்து வவுனியா வெகுஜன அமைப்பு துண்டுப்பிரசுரம்

வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தால் பிரசுரம் ஒன்று - மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

அப்பிரசுரத்தில், நீண்ட பெரும் போரின் பின்னர், சிறிது ஓய்வு ஒன்று கிடைத்துள்ளது. அதனூடாகப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு, சமாதான சூழல் ஒன்று உருவாகி, தமிழ்பேசும மக்களின் நிம்மதிப்பெருமூச்சோடு நிரந்தரமான தீர்வு ஒன்று கிடைக்கும் எனும் கனவுகளோடு இருந்த வேளை, பேச்சுக்களில் பேசிய விடயங்கள் எதுவுமே நடைபெறாது இழுத்தடிக்கப்பட்டன.

அதேவேளை, ஜனாதிபதியிலிருந்து, சமாதானப் பேச்சுக்களைப் பற்றிப் போதிக்கவேண்டிய புத்தபிக்குகள்வரை, சமாதானத்தைக் குழப்ப வேண்டும் என்றும், போரை ஆரம்பிக்கவேண்டும் என்றும், தமிழ்பேசும் மக்களுக்கு எந்த உரிமைகளையும் வழங்கக்கூடாது என்றும் இனவாதம் பேசி, எந்த ஒரு அதிகாரத்தையும் தமிழ் மக்களுக்கு வழங்காது பேச்சுக்களை வீணான பேச்சுக்களாக மாற்றியபோதுதான்-

தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களிலிருந்து இடைவிலகியுள்ளனர்.

இதன் பின்னர் மக்களின் இயல்பு வாழ்வைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதற்காக இடைக்கால நிர்வாக அலகு ஒன்று வடக்கு, கிழக்கிற்கு வழங்க வேண்டும் என்று அரசிடம் கோரியுள்ள போதும் எந்த அதிகாரமும் அற்ற திட்டமே முன்வைக்கப்பட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்

(கொழும்பு)

சுகாதார ஊழியர்கள் மீண்டும் வேலைநிறுத்தப் பேராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்த காலத்தில், புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட சுகாதார ஊழியர்கள், இன்னமும் விலக்கிக்கொள்ளவில்லை.

தொலைபேசி இயக்குநர், மேற்பார்வையாளர் ஆகியோர் தற்போதும் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு தற்காலிகமாக இணைக்கப்பட்டவர்களை விலகிக்கொள்ளுமாறு கோரியே, மீண்டும் சுகாதார ஊழியர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

நேற்றுக்காலை 8 மணி முதல் 1 மணிவரை இந்தப் போராட்டம் நடைபெற்றது. தமது கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்படாவிட்டால், நாடு தழுவியரீதியில் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாகத் சுகாதார ஊழியர்கள் தெரிவித்தனர். (01)

## கடற்றொழில் அமைச்சருக்கெதிராக கல்பிட்டி நகரில் மறியற்போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

கடற்தொழில் அமைச்சர் மகிந்த விஜயசேகரவின் கடும் போக்கைக் கண்டித்தும், செவ்வாய்க்கிழமை பத்தலங்குண்டுவில் வைத்து, மீனவபரிசோதகர்களால் கைதுசெய்யப்பட்ட 9 மீனவர்களையும் விடுவிக்குமாறு கோரியும் - மறியல் போராட்டமொன்று, கல்பிட்டி நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

செவ்வாய்க்கிழமை லைலா வலை கொண்டு, மீன்பிடிக்கச் சென்ற கல்பிட்டி பிரதேச மீனவர்களையும், அவர்களது படகுகளையும் பத்தலங்குண்டு தீவுப்பகுதியில் வைத்து கைதுசெய்து, 24 மணித்தியாலயங்களுக்கு மேல் சேரக்குளிதீவுப் பகுதியில் தடுத்து வைத்ததையடுத்து, அங்கு பதற்றநிலை ஏற்பட்டது.

கடற்தொழிலுக்குச் சென்ற சக மீனவர்கள் மீண்டும் கரைக்குத் திரும்பாததால், தமது தொழிலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, நேற்றுமுன்தினம் இந்த எதிர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

ஹெட்டில் பகுதியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட நூற்றுக்கணக்கான மீனவர்கள், நகர வீதியை மறித்து கல்பிட்டி பிரதேசசபைக்கு முன்பாக வீதி மறியலில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அமைச்சர் மகிந்த விஜயசேகரவை அப்பதவியிலிருந்து அகற்றுங்கள்', 'எமது கடல் வளத்தைப் பயன்படுத்த எமக்குத் தடையா?', 'வங்கக் கடலை வெளிநாடுகளுக்கு விற்றுத்தள்ளும் அமைச்சர் மகிந்த விஜயசேகர- 'மாத்தறைக்கு ஒரு நியதி, கல்பிட்டிக்கு வேறொரு நியதியா?' போன்ற பதாதைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியவாறும், கற்பிட்டி பிரதேச செயலகத்தைச் சென்றடைந்தனர்.

வீதி மறியலில் ஈடுபட்டதால், கல்பிட்டி பிரதேசப் போக்குவரத்துக்கள் - சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்திருந்தன. (01)

## போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு

# அரசாங்கம் வழங்கும் நஷ்டஈட்டுத்தொகை இழப்பீடுகளை நிவர்த்தி செய்யப் போதாது

## கனேடிய அமைச்சின் ஆலோசகர்

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அரசினால் வழங்கப்படும் நட்ட ஈட்டுத்தொகை அவர்களது இழப்பீடுகளை நிவர்த்திசெய்ய ஒரு போதும் போதாது. அந்தத் தொகை அதிகரிக்கப்படவேண்டும் என கனேடிய வெளிவிவகார அமைச்சின் பிரதம ஆலோசகர் சாள்ஸ் புரடி தெரிவித்தார்.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு, யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர், நேற்றுமுன்தினம் யாழ். அரச அதிபரை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போதே அரச அதிபரிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மக்கள், குறிப்பாக வடக்கு - கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் போரினால் மோசமாகவே பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் இருப்பிடங்கள் பலவற்றை இழந்துள்ளார்கள். அவர்களது அவல நிலையை நேரில் காண்பதற்காகவே நான் இலங்கைக்கு வந்துள்ளேன்.

இங்கு மட்டக்களப்பு, வன்னி, யாழ்ப்பாணம் போன்ற பல பிரதேசங்களுக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்ததுடன், அது தொடர்பாக மக்களுடன் உரையாடியுள்ளேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தனியார் விடுதி ஒன்றில் பத்திரிகையாளர்களைப் பிரத்தியேகமாகச் சந்தித்த சார்ள்ஸ், பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். பத்திரிகையாளர்களின் பாதுகாப்பிற்குத் தன்னால் இயன்ற பங்களிப்பை வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களிடம் வாக்குமூலங்களையும், முறைப்பாடுகளையும் பெற்றுக்கொண்ட இவர், அவற்றைக் கனேடிய வெளிவிவகார அமைச்சு மூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த இருநாட்களும் - யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர், யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கடற்தொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.



இனுவில் கிழக்கு இளைஞர் கழக ஆண்டு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ரி.சிவதெட்சணாமூர்த்தி - மங்கள் விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். அருகில் உடுவில் பிரதேச செயலக இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.கணபதிப்பிள்ளையும் காணப்படுகிறார்.


## வாழ்க வளமுடன்

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### இரண்டாவது அகவையில்



பெயர் : பி.அபிராமி
முகவரி : சந்தை வீதி, நவிண்டில், கரணவாய்.

### மூன்றாவது அகவையில்

பெயர் : மு.முவீசன்
முகவரி : அம்பிகைநகர், வேலணை.



### ஒன்பதாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.டிலைக்ஷன்
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### நான்காவது அகவையில்

பெயர் : கி.கஜீவன்
முகவரி : நவாலி கிழக்கு, மானிப்பாய்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## முன்பள்ளி விளையாட்டு விழா

(சுதுமலை)

மானிப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நடாத்தும் சிவசக்தி முன்பள்ளியின் விளையாட்டு விழாவும், இலவச சீருடை வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கிவரும் நெல்லியடி ஆயுர்வேத வைத்தியநிலையம்

(நெல்லியடி)

நெல்லியடி இராச கிராமத்தில் இயங்கும் ஆயுர்வேத வைத்திய நிலையம் - மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கி வருகின்றது

கரவெட்டிப் பிரதேசசபையால் இந்த வசதிகள் செய்துகொடுக்கப்பட்டபோதும், சிலர் இந்த வசதிகளை துஷ்பிரயோகம் செய்திருக்கிறார்கள் என்றும், அதனால் தொடர்ந்து அந்தச் சேவைகளைச் செய்து கொடுக்கமுடியாமல் இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

மேலும் தற்போது பிரதேசசபையிடம் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும், இதனால் உடனடியாகத் திருத்த வேலைகளைச் செய்யமுடியாது எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயம் பிரதேச செயலர் மட்டத்தில் ஆராயப்பட்டு, மேற்படி வைத்திய நிலையத்திற்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படி பிரதேசசெயலர் - பிரதேசசபையிடம் பணித்துள்ளதாகத் தெரியவருகிறது.

# சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றுவந்த மூவருக்கு மின்னிணைப்பு வழங்க உத்தரவு

சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற மூவருக்கு, உடனடியாக மின் இணைப்புக்களை வழங்கும்படி யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா - மின்சாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற 7 பேரை - பொலிஸாரின் உதவியோடு கைது செய்த மின்சாரசபையினர், நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர். இது தொடர்பான வழக்கு விசாரணைகள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் நடைபெற்றது.

அதன்போது, சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றவர்களான மூவர், தாம் கடந்த சித்திரை மாதத்திற்கு முன்பே மின்இணைப்புக்களைப் பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளதாகவும், மின்சாரசபையினர் தமக்குரிய இணைப்புக்களை இதுவரை வழங்கவில்லை எனவும் மன்றில் தெரிவித்தனர். ஆனால், தமக்குப் பின்னர் விண்ணப்பம் செய்த பலருக்கு மின்இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இவற்றைச் செவிமடுத்த நீதிவான் - உடனடியாக இந்த மூவருக்கும் மின்இணைப்புக்களை வழங்கும்படி, மின்சாரசபையினருக்கு உத்தரவிட்டுள்ளார். இதேவேளை, இதுவரை மின்விநியோகம் வழங்கப்படாமைக்கான காரணத்தை நீதிமன்றிற்கு உடனடியாக, சுன்னாகம் மின்சார நிலைய மின்விநியோகப் பகுதி பொறுப்பதிகாரி தெரிவிக்க வேண்டுமெனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அடுத்த மாதம் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள மேலதிக விசாரணைகளின்போது, மின்சாரசபையின் மின்விநியோகப் பொறுப்பதிகாரி சமுகமளிக்கவேண்டுமெனவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டவிரோத மின்பாவனைகளின் அதிகரிப்பால் - அநியாய உயிரிழப்புக்கள் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. இந்த இறப்புக்களுக்கு மின்சாரசபையும் ஒருவகையில் காரணமாக அமைவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## சிசு உதான பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த சிசு உதான பொது அறிவுப்போட்டிப் பரீட்சை - தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டு, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## விசேட கொடுப்பனவு

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்- தனது அங்கத்தவர் 70 பேருக்கு, அவர்களின் சேமிப்பின் அடிப்படையில் விசேட கொடுப்பனவுகளை வழங்கியுள்ளது.

70 அங்கத்தவர்களும், மொத்தம் 35 ஆயிரம் ரூபாவை அவர்களுடைய சேமிப்பின் அடிப்படையில் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. (55)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவைக் கந்தன் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் - நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## பாலர் பாடசாலைக்கு புதிய கட்டடம்

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் நடாத்தப்படும் பாலர் பாடசாலைகளில், உடுவில் மேற்கு பாடசாலைக்குகெனப் புதிய கட்டடம் கட்டப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. இதற்காக உடுவில் டச்சு வீதியில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான காணி - ஊர்மக்களின் நிதிப்பங்களிப்புடன் அண்மையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக இந்து இளைஞர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர். (101)

## பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தினர் நடத்தும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருததரங்கு - நாளையும், நாளை மறுதினமும் - மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும், 13,14,15, ஆம் திகதிகளில் ஊர்காவற்துறை சென். அன்ரனிஸ் கல்லூரியிலும், புங்குடுதீவு மகாவித் தியாலயத்திலும் நடைபெறவுள்ளது அனைத்து பாடங்களுக்குமான இலவசப் பாடக்குறிப்புகளும் வழங்கப்படவுள்ளன. (46)

## முன்பள்ளிகளில் சீரான கட்டணம் அறவிடப்படும்

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலுள்ள சகல முன்பள்ளிகளுக்கும் சீரான கட்டமைப்பு முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் தை மாதம் தொடக்கம் நுழைவுக்கட்டமாக ரூபா 100 உம், மாதாந்தக் கட்டணமாக ரூபா 100 உம் அறவிடப்படவுள்ளது என, உதவிக்கல்விப் பணிப்பாளரும், தேசிய எழுச்சிப் பேரவை செயலாளருமான துரை.சத்தியசீலன் தெரிவித்துள்ளார். (116)

# மூலிகைகளை இலகுவாகப் பெற வழிவகை செய்யவேண்டும்

இனிமையான மாலைப் பொழுதினில் கொழும்புத் துறையை நோக்கியதாக எனது பயணம் - என் நண்பனின் உதவியுடன் தொடர்கிறது. A.V



ஜோர்ஜ் பொன்னதேத்தம்மா

ரோட்டிலுள்ள சென். ரோசாறியன்ஸ் சித்த ஆயுர்வேத ஹோமியோபதி வைத்தியசாலையுடன் (இன்று 15 வருடங்களுக்கு முன் இயங்கியது) முடிகிறது. இந்த வைத்தியசாலையின் ஸ்தாபகரின் மகளான ஜோர்ஜ் பொன்னதேத்தம்மாவிடம் எம்மை அறிமுகப்படுத்தி, அவருடனான எமது செவ்வியை ஆரம்பித்தோம்.

**நீங்கள் எவ்வாறு ஆயுர்வேத வைத்தியத்துறையில் இணைந்தீர்கள்?** என எமது கேள்வியை ஆரம்பித்தோம்.

இந்த ஆயுர்வேத வைத்திய முறையை நாங்கள் பரம்பரையாகச் செய்து வருகிறோம். நான், எமது நான்காவது தலைமுறை ஆயுர்வேத வைத்தியராக உள்ளேன். இது ஒரு புனிதமான, அதிலும் மக்களுக்குச் சேவை செய்யும் ஒரு மகத்தான தொழில்தான் வைத்தியத்தொழில். இதில் நான் இணைந்தமைக்கு - இதன்மூலம் எனக்கிருந்த பற்றுதலும், சேவை மனப்பான்மையும் காரணமாகும். இவற்றுடன், பெரும் அவஸ்தையில் வரும் நோயாளி ஒருவர்- நாளடைவில் குணமடையும் போது, எமது மனதில் பெரும் திருப்தி ஏற்படுகின்றது. உயிருடன் விளையாடும் விளையாட்டில் நாங்கள் வெற்றி கண்டுள்ளோம் என்ற மனநிறைவு ஏற்படுகின்றது.

இதனாலேயே இந்த வைத்தியமுறையைக் கற்றேன். நான் கற்றதை இப்போது செயற்படுததி வருகிறேன் என வைத்தியருக்குரிய பக்குவத்துடன் தெரிவிக்கும் இவரிடம் -

**சித்தர்களால் உருவாக்கப்பட்ட இந்த வைத்திய முறையின் இன்றைய நிலை என்ன?** என வினவியபோது - இற்றைக்கு மூன்று, நான்கு தசாப்தங்களுக்குமுன் இதற்கென ஒரு தனித்துவம் இருந்தது, இருந்தும் வருகின்றது. ஆனால், இன்றைய நவீன விஞ்ஞான உலகில் அதிகரித்துவரும் கண்டுபிடிப்புக்களினால் நாளுக்கு நாள் ஆங்கில மருந்துகளின் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மிக அருகிலேயே ஆங்கில மருந்து வகைகளால் பெற்றுக்கொள்ளக்கூடியநிலை உள்ளமையாலும், இன்று மக்கள் ஆங்கில வைத்தியமுறையை நாடிச்செல்வதை அவதானிக்கமுடிகிறது. துணியை வேண்டித் தைத்து அணிவதைவிட, தைத்தபடியே வாங்கி அணிவது சுலபமல்லவா? இப்படி ஒரு எண்ணம் மககளிடையே உள்ளது என யதார்த்தமாகப் பதிலளித்தார் வைத்தியர்.

**பல நோய்களுக்கும் ஒரு வைத்தியரே வைத்தியம் செய்வதனால், ஒரு துறையில் நிபுணத்துவம் பெற முடியாதநிலை உள்ளது. இதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?** என வினவினோம். அதற்கு, இது ஏற்றுக்கொள்ள கூடியதுதான். எங்கள் வைத்தியமுறையில் பொதுவைத்தியமே அதிகளவில் எல்லோராலும் மேற்கொள்ளப்படுகிறது. ஏனெனில், ஒருகிராமத்தில் ஒரு வைத்தியர் தான் இருப்பார். அப்போது என்ன நோய் ஏற்பட்டாலும் அவரிடமே செல்லும் தன்மை அன்றுதொட்டே இருந்து வந்துள்ளது. இதனால், ஒரு துறை சார்பாகக் கற்றாலும், பொது வைத்தியமே மேற்கொள்ளும் நிலை உள்ளது. நான் கண்சார்பாகவே கற்றேன். ஆனால், தனியே கண் வைத்தியம் செய்வதில்லை. விஷகடி, நாரிப்பிடிப்பு, வாதம், குத்து, காய்ச்சல், வயிற்றோட்டம் எனப்பல நோய்களுக்கும் வைத்தியம் செய்து வருகிறேன் என, தனது கருத்தை முன்வைக்கும் வைத்தியரிடம் -

**இப்போது சித்த வைத்தியத்திற்கான மூலிகைகளை இலகுவாகப் பெறமுடிகிறதா?** என வினவியபோது- ஒரு சில மூலிகைகளையே பெறமுடிகிறது. பெரும்பாலான மூலிகைகளை கடைகளிலேயே வாங்குகின்றோம். மூலிகைகள் அருகிப்போவதற்கு, இராணுவ ஆக்கிரமிப்பும் ஒரு காரணமாகும். எனது வீட்டிலும் ஒரு சில மூலிகைகளை வளர்த்து வந்தேன். ஆனால், அவை இப்போது இல்லை.

முடக்கொத்தான் என்ற மூலிகை- அரியாலைப் பகுதியிலிருந்து அதிகளவு முன்பு பெற்றுவந்தோம். ஆனால, இப்போது அது சாத்தியமாகவில்லை. நாம் ஒரேதடவையாக மூலிகைகளை எடுத்து, அதிலிருந்து மருந்துக்குத் தேவையானவற்றைச் சேமித்து, தேவையான அளவுகளில் எடுத்துக் கொள்கின்றோம். இதனால், காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இடர்களைச் சமாளிக்க முடிகிறது எனப் பதிலளித்தார்.

**நீண்ட அனுபவத்தில் நீங்கள் சாதித்ததைப் பகிர்ந்து கொள்வீர்களா?** என்றவுடன் - 1996, 1998 காலப்பகுதியில் விஷகடிக்கு உட்பட்ட பல நோயாளர்களைக் காப்பாற்றியுள்ளேன். அப்போது இராணுவக் கெடுபிடி, ஊரடங்கு இருந்த நேரம், எமது சிகிச்சை பெரும் பயனாக அமைந்தது. கண்களில் ஏற்பட்ட நோய் காரணமாக இருவரைக் குணமாக்கியுள்ளேன். அதிலொருவர் கண்ணின் வெண்விழி முழுவதும் தசை வளர்ந்திருந்தது. பெரிய விகாரமாகத் தோற்றமளித்த கண்ணை, சரியாக ஒரு மாதத்தில் தசைகளைப் படிப்படியாக எண்ணெய்மூலம் கரைத்து, அவரைக் குணமாக்கினேன். இன்னொருவருக்குக் கண்ணில் இரத்தக் கசிவு ஏற்பட்டது. அதனையும் படிப்படியாக இல்லாமற் செய்தேன். இப்படிப் பல நோய்களைக் குணமாக்கியுள்ளேன், குணமாக்கியும் வருகிறேன் என மகிழ்ச்சியுடன் கூறிய வைத்தியரை - **மேலைத்தேய வைத்தியமுறையுடன் ஒப்பிடுகை யில் இந்த வைத்தியத்தால் 'உடனே குணமடைய முடியாதநிலை உள்ளது. அதைப்பற்றிக் கூறுவீர்களா?**

எமது வைத்தியம் பொறுமையுடன் மேற்கொள்ளப்படுகிறது. அதேபோல், நோய்களின் தன்மையைப் பொறுத்துப் படிப்படியாகக் குணமடையக் கூடிய மருந்துகளையும் உபயோகிக்கிறோம். எமது மருந்தை உட்கொண்டு ஒரு நோய் குணமடைகிறது என்றால், அந்த நோய் மீண்டும் வருவதற்கான சாத்தியக் கூறுகள் பெரும்பாலும் இல்லை. காய்ச்சல், காதுக்குத்து, கடிகள் இவை உடனுக்குடன் குணமாக்கப்படுகிறது. வாதம், நாரிப்பிடிப்பு போன்ற நோய்கள் நாளடைவிலேயே குணமடையும். எமது மருந்துகளை உட்கொள்ளுவதால், நேரடியான பக்க விளைவுகள் உடலுக்கு ஏற்படுவதில்லை. மாறாக ஆங்கில மருந்தை அதிகமாக உட்கொள்ளுவதால், பகக விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தமிழ் மருந்தை உட்கொண்டு, ஆங்கில மருந்தையும் உட்கொள்ளுபவர்கள் - அதிலும் குணமடையாது, மீண்டும் தமிழ் மருந்தை நாடிவரும் தன்மை உள்ளது எனத் தெரிவித்தார்.

**குடும்பத்தில் உங்கள் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?** என்றதும் சாதாரண ஒரு குடும்பத்தலைவி தனது குடும்பப் பொறுப்புக்களை எவ்வாறு நிறைவேற்றுகிறாரோ, அவ்வாறே நானும் என் குடும்பத்தை நகர்த்தி வருகின்றேன். மற்றப்படி மருந்துகள் கொள்வனவு செய்வது, மூலிகைகள் இடிப்பது மற்றும் இதர வேலைகளை எனது கணவரும், பிள்ளைகளும் செய்து வருகின்றார்கள். இதனால், எனது பணிகளை இலகுவாக நிறைவேற்ற முடிகிறது. இதைவிட, எமது பங்கிலேயே மரியாயின்சேனை தலைவியாகவும், மேய்ப்புப்பணிச்சபை அங்கத்தவராகவும் உள்ளேன் என பெருமிதமாகத் தெரிவித்தார்.

எமது செவ்வியை நிறைவு செய்யும் முகமாக **நீங்கள் இந்த ஆயுர்வேத வைத்தியம் தொடர்பாக மக்களுக்குக் கூறுவது என்ன?** என்றதும்- தமிழர்களின் பரம்பரையான, பாரம்பரிய வைத்திய முறையான இவ் வைத்தியம் வளர்க்கப்படவேண்டும். இதில் ஏற்படும் குறைபாடுகளை இனங்கண்டு, உரியவர்கள் அதனை நிவர்த்தி செய்யவேண்டும். பல வைத்தியர்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளனர். இங்குள்ளவர்கள் போதிய வசதியின்றி செயற்பட்டு வருகின்றார்கள். அரசாங்கம்- எமது வைத்தியமுறையையும் கவனத்தில் எடுத்து, எமக்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும். குறிப்பாக, மூலிகைகளைப் பெறுவதற்கும், ஏனைய மருந்து வகைகளை இலகுவாகப் பெறக்கூடிய வழிகளைச் செய்யவேண்டும் என்று தனது ஆதங்கத்தை வெளியிட்டார்.

ஆயுர்வேத வைத்தியமுறை சார்பாக நாம நல்ல கருத்துக்களைப் பெற்ற திருப்தியுடன், செவ்வியை நிறைவுசெய்து, எமது அலுவலகம் நோக்கிய பயணம் தொடர்ந்தது.

நேர்காணல் : காவலூர் விஜேந்திரன்



## சிநேகிதியே..

# அன்பின் சிநேகிதிக்கு



எனது கடந்தவாரக் கடிதம் கண்டிருப்பாய். அதன் மூலமாக ஒரு தெளிவைப் பெற்றிருப்பாய் என எண்ணுகிறேன். வீணாக எமது நேரத்தைப் பாழாக்கும் தொலைக்காட்சித் தொடர்களில் மூழ்கி, காலத்தை கழிப்பதைவிட்டு, நல்ல முயற்சிகளில் இறங்கு. அதற்கான பல வழிகள் உன் முன்னே விரிந்து கிடக்கின்றன. பெண்ணியம், பெண்களுடைய விடுதலை தொடர்பாக அடிக்கடி என்னோடு நீ வாதாடும் விடங்களைப் பத்திரிகைகளுக்கு எழுதி அனுப்பு.

உனது அடிமனதின் ஆழத்திலே உறைந்துபோயுள்ள எண்ணங்களை - எண்ணக் கருக்களுக்கு உருக்கொடுத்துக் பார். உலகம் உன்பக்கம் திரும்பிப்பார்க்கும். ஆணுக்கு - பெண் என்றும் அடிமையா? என என்னை அடிக்கடி கேட்பாயே. அது தொடர்பாக எதுவும் கூறாமலே நான் பல தடவைகள் சமாளித்திருப்பது உனக்கு நிச்சயம் நினைவிருக்கும்.

இது தொடர்பாக இன்று உனக்கு ஒரு சில விடயங்களைக் கூற விழைகிறேன். இது என்னுடைய கருத்து அல்ல. அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலே, தமிழீழ மகளீர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி தெரிவித்த கருத்துக்களே இவை.

ஒரு பெண்ணினுடைய ஆளுமையை நாம் மதிப்பது கிடையாது. ஒரு பெண் எப்படி இருக்கவேண்டும் எனும் வரையறையை நாம் வகுத்துள்ளோம். பெண்ணினுடைய உள்ளாற்றல்களை வெளிக்கொணர்ந்து, அவளையும் இந்தச் சமூகத்தினுடைய இணைபிரியாத அங்கமாக்கி, அவளது ஆளுமைக்கு மதிப்புக் கொடுத்து, அதனை இந்த தேசத்திற்குப் பயன்படவைக்க நாம் பின்நிற்கின்றோம்.

ஒரு பெண் உணரமுடியாத வகையிலே அவளுக்குப் பல விலங்குகள் பூட்டப்பட்டிருக்கிறது. இவை - கைகளிலும், கால்களிலும் பூட்டப்படவில்லை. அவளுடைய மனதிலே பூட்டப்பட்டுள்ளது. மனங்களிலே பூட்டப்படடுள்ள இந்த விலங்குகளை உடைத்துக்கொண்டு, அவள் வெளியே வரவேண்டும். அவ்வாறு வெளியே வரும் பெண்களைத் தட்டிக்கொடுத்து, முன்னுக்குக் கொண்டு வரவேண்டியது சமூகத்தினுடைய கடமையாகும்.

நானும் ஒரு பெண், இன்று இத்தனை பேருக்கு முன்னால் நின்று, இவ்வளவு விடயங்களையும் பேசுகிறேன் என்றால், அதற்குக் காரணம் யார்? என்னை வளர்த்துவிட்டது யார்? அவரும் ஒரு ஆண்தானே' எனத் தெரிவித்தார்.

இந்தக் கருத்துக்களை உனது கவனத்திற்குக்கொண்டு வருவது பயனுடையதாகும் என எண்ணுகிறேன். எனவே, உன்னைச் சுற்றியுள்ள விலங்குகளை உடைத்துக்கொண்டு, வெளியே வா. புதியதொரு உலகத்தை உனது கைகளால் சமைப்போம் துணிந்து வா.

'பெண்ணுரிமையைப் பெறுவதற்கான போராட்டம் என்பது - ஆண்களுக்கு எதிரான போராட்டம் அல்ல. ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான போராட்டம்' எனும் தேசியத் தலைவரின் கருத்தை, உனது மனதிலே கொண்டு, தடைகளைத் தாண்டி வா வெற்றிப்படிகள் உனக்காவே காத்துக் கிடக்கின்றன.

உலகம் இன்று எங்கோ போய்விட்டது. வேகமாக மாறிவரும் உலகத்தில் - போட்டி போட்டே எமது நிலையைத் திடப்படுத்திக் கொள்ளவேண்டிய தேவை உருவாக்கியுள்ளது. இத்தகையதொரு அவசரமான உலகத்திலே வாழும் நீ - அவசியமற்ற தொலைக்காட்சித் தொடர்களிலே உனது காலத்தை கழிப்பது, எங்களது மடமைத்தனம் என்பது நான் சொல்லி உனக்குப் புரியவேண்டியதில்லை.

மின்சார வசதிகள் எதுவும் இல்லாது நாம் வாழ்ந்தபோது, எவ்வளவு மகிழ்வாக வாழ்ந்தோம். நீகூடக் கணவன், பிள்ளைகளோடு - கோயில்கள், உறவினர்கள் வீடுகள் என அடிக்கடி சென்று மகிழ்வாயே.

உனது வீட்டுக்கு வரும் விருந்தினர்களையும் நன்றாக வரவேற்று, உபசரித்து அவர்களையும் மகிழ்விப்பாயே. இத்தகையதொரு மகிழ்வான நிலையை இன்று ஏன் நீ இழந்துவிட்டாய் என்பது உனக்கே புரியும். அந்தக் கொடிய அரக்கரிடமிருந்து விடுதலை பெற்றுக்கொள்.

ஆணாதிக்கத்தை எதிர்த்துப் போராடும் முன், உன்னுள்ளேயே ஒளிந்து கிடக்கும் அறியாமைக்கும், பேதமைக்கும் எதிராகப் போராடு. அப்போது தானாகவே உன்னுடைய விலங்குகள் உடையும்.

பிள்ளைகளின் கல்வியில்கூட, நீ இப்போது அக்கறை செலுத்துவதாக இல்லையென, உனது கணவன் கவலைப்பட்டுக் கொண்டார். அந்தநிலை மாறவேண்டும். தொலைக்காட்சித் தொடர்களில் கழிக்கும் நேரத்தை, பிள்ளைகளோடு செலவிடு. அவர்கள் வாழ்வு வளமாகும்.

என்னுடைய இந்தக் கடிதம் - உனக்குச் சரியானதொரு தெளிவை ஏற்படுத்தியிருக்கும் என எண்ணுகிறேன். அதேவேளை, உன்னுடைய நண்பிகள் சிலர் தொடர்பாகவும் பேசவேண்டியுள்ளது. நான் உன்னோடு பேசுவதை, நீ அவர்களுக்கு எடுத்துக் சொல்லுவாய் என எண்ணுகிறேன். எனவே, அடுத்த மடலில் அது பற்றிப் பேசுவோம்.

அன்பின் சினேகிதன்

# பால்ரீதியாகப் பெண்களை ஒருபோதும் ஒதுக்கிவிட முடியாது

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இத்தகைய குற்றங்களுக்கு விதிக்கப்படும் சிறைத்தண்டனைகள் மிகநீண்ட காலப்பகுதிகளாகக் காணப்படுகிறது. 1995 ஆம் ஆண்டுக்குப் பின், சிறைத்தண்டனைக் காலம் - 22 வருடங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, சிலவேளை



களில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நஷ்டஈடும் செலுததவேண்டியுள்ளது.

பாலியல்ரீதியான குற்றங்கள் தொடர்பான விசாரணைகளின்போது, குறித்த பெண் - பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டாளா என்பது நிரூபிக்கப்படல் வேண்டும். அறிவியல் வளராத காலங்களிலே, ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாளா? என்பது அவளது உடலில் உள்ள காயங்களை வைத்தே தர்மானிக்கப்பட்டது.

அதாவது - உடைகள் கிழிக்கப்பட்டிருத்தல் வேண்டும், கண்டற்காயங்கள், உராய்வுக் காயங்கள், கிழிசல்கள் அவளது உடலிலே காணப்படவேண்டும். இவ்வாறான தடயங்கள் காணப்படும்போதே, அந்தக் பெண் வன்முறையின்ரீதியிலே துன்புறுத்தப்பட்டாள் எனக் கொள்ளப்பட்டது.

ஆனால், இன்றைய நிலைமை அவ்வாறில்லை. உடலிலே எந்தவிதமான சிறு காயங்கள்கூட இல்லாமல், பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம் எனக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான பல வழக்குகளும் நடைபெற்றுள்ளன.

குறிப்பிட்ட பெண்ணினுடைய சம்மதமின்றி நடைபெற்ற எந்தவிதமான உடலுறவுகளும் - பாலியல் வல்லுறவுகள் என்றே கொள்ளப்படுகின்றன. சம்மதம் எனும்போது, குறிப்பிட்ட பெண் வெளிப்படையாக தனக்கு இந்த உறவில் சம்மதம் எனத் தெரிவக்காத சந்தர்ப்பத்தில் நடைபெற்ற அனைதது உறவுகளும் வல்லுறவுகளாகவே கொள்ளப்படுகின்றன.

அவள் மௌனமாக இருந்தால், எனவே அவளுக்கு இந்த விடயத்தில் சம்மதம் இருந்தது என நீதித்துறை ஒருபோதும் பொருள் கொள்ளாது. இது தொடரபான சட்ட விடயங்களும் நடைமுறையில் உள்ளன.

1993 இல் இடம்பெற்ற மிகப்பிரபலமான வழக்கு விசாரணை ஒன்றின்போதே, இந்த நடைமுறைகள் சட்டத்துறையிலே ஏற்படுத் தப்பட்டது.

இதன்மூலமாகக் குற்றவாளிகள் இலகுவில் தப்பித்துச் சென்றுவிட முடி யாதொரு இறுக்க மானநிலை உரு வாகியுள்ளது.

இந்தச் சம்மதம் பெறும்நிலை தொடரபாக, நீதித்துறையிலே பல கடுமையான போக்குகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. முதலாவது- ஒரு பெண்ணினுடைய சம்மதமானது உள்முறையை பிரயோகித்தோ அல்லது அவளை மிரட்டியோ பெறப்படடிருப்பின், அது சம்மத மாகக் கொள்ளப படுவதில்லை.

இரண்டாவதாக - சட்டரீதியாக நிதிமன்ற உத்தரவின் பேரில் பிரிந்து வாழும் கணவன்-மனைவிக்கிடையிலான உடலுறவும் கற்பழிப்பாகவே கருதப்படுகிறது.

மூன்றாவது விடயமாக - வலது குறைந்த அங்கவீனமுற்ற பிள்ளைகளை, அவர்களுடைய சம்மதத்தின் பேரிலோ அல்லது சம்மதமின்றியோ கற்பழித்தால், அதுவும் பாலியல் வல்லுறவாகவே கருதப்படும்.

நான்காவது விடயமாக - எதிர்காலத்திலே திருமணம் செய்யப்படும் எனும் உறுதி

## தொகுப்பு ~ இ.சர்வேஸ்

மொழியை அளித்து, ஒரு பிழையான முறையிலே சம்மதத்தைப் பெற்று, பெண்களைப் பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தல்.

ஐந்தாவது - பதினாறு வயதிற்குட்பட்ட பெண், அவளுடைய சம்மதத்தின் பேரிலோ அல்லது சம்மதம் இன்றியோ எந்தவிதத்திலாவது உடலுறவுக்கு உட்படுத்தப்பட்டால், அதுவும் வல்லுறவாகவே கொள்ளப்படுகிறது.

இந்த ஐந்து விடயங்களும் பாலியல் வல்லுறவுகள் எனும் பொதுப்பட்டியலில் உள்ளே அடக்கப்படுகின்றன.

**அண்மையில் இலங்கை சட்ட உதவி மன்றத்தினால் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக, சட்ட ஆலோசனைகள் எனும் விடயம் சம்பந்தமாக - யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்ததரங்கு ஒன்று நடாத்தப்பட்டது. அதிலே கருத்துரை வழங்கிய அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமினுடைய கருத்துகளிலிருந்து தொகுக்கப்பட்ட விடயங்கள் இப்பகுதியில் பிரசுரமாகின்றது.....**

பொதுவாக ஒரு பெண் பாலியல் வல்லுறவுக்கு உளளாக்கப்பட்டால், அது தொடர்பான முதற்கட்ட சுருக்க முறையிலான விசாரணைகள் - கீழ்நீதிமன்றங்களிலே நடைபெறும். பின்னர், அந்த வழக்குகள் மேல் நீதிமன்றங்களுக்குப் பாரப்படுத்தப்படும்.

ஆனால், பதினாறு வயதுக்குட்பட்ட பெண்கள் - பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தப்படும்போது, அந்தப் பெண்ணின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதற்கான மருத்துவச் சான்றிதழ் இரண்டையும் இணைத்து, கீழ்நீதிமன்றத்திலே பாரப்படுத்தப்படும்போது, அந்த சம்பவம் தொடர்பான குற்றப் பத்திரமானது, நேரடியாகவே மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்படும்.

தற்போது யாழ். குடாநாட்டிலே இந்த வகையான அதாவது, வயது குறைந்த பெண் பிள்ளைகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் வழக்குகள் அடிக்கடி வந்த வண்ணம் உள்ளன. அண்மைக்காலமாக இவற்றினுடைய எண்ணிக்கை அதிகரிப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. அதிலும் ஆச்சரியப்படத்தக்க முக்கிய விடயம் என்னவெனில், பண்பாட்டுக்குப் பெயர்போன இந்த யாழ்ப்பாணத்தில் வாழும் சில பெண்கள்- பூரண சம்மதத்துடன் தவறான உடலுறவுக்குப் போகிறார்கள். இது மிகவும் மனவேதனைக்குரிய விடயமாகும்.

குறித்த வழியிலே, குறைந்த வயதுடைய பெண்கள் எதிர்ப்பாலாருக்கு எழுதிய காதல் கடிதங்களும், கவிதைகளும் சான்றுப் பொருடகளாக நீதிமன்றத்திலே சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. அந்தக் கவிதை வரிகளைப் பார்க்கும்போது, கவிஞர் கண்ணதாசன்கூட தோற்றுப்போய் விடுவார்களென எண்ணத்தோன்றுகின்றது. (தொடரும்.....)

# உலக சாதனை முயற்சியில் ஒரு ஈழத் தமிழ்ப் பெண்



உலகின் கூடியநேரம் பணியாற்றிய முதலாவது பெண் அறிவிப்பாளராக, உலக சாதனை முயற்சியில் இடம்பிடிப்பதற்காக லண்டனிலிருந்து ஒலபரப்பாகும் ஐரோப்பிய தமிழ் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றும் செல்வி சிவாந்தி சிவசுப்ரமணியம் - தனது இலட்சியமான கின்னஸ் உலக சாதனைக்காகத் தொடர்ந்து 123 மணித்தியாலங்கள் அறிவிப்பாளராக கடமையாற்றத் தீர்மானித்துள்ளார். இவர் 25.10.2003 காலை 10 மணிமுதல் தனது முயற்சியை ஆரம்பித்துள்ளார். இந்தச் சாதனை முயற்சி - 30.10.2003 மதியம் 12 மணிவரை, 123 மணித்தியாலங்கள் தொடர்ந்து இந்தச் சாதனையை நடத்தவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக்கொண்டவர். ஆரம்பகாலத்தில் லண்டன் ஐ.பி.சி. தமிழ் வானொலியில் கடமையாற்றிய இவர், தற்போது லண்டனிலிருந்து ஒலிபரப்பாகும் E.T.B.C. வானொலியில் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்.

இலண்டனில் உள்ள பல நேயர்கள் குளிரையும் பொருட்படுத்தாது நேரடியாக கலையகத்துக்கு வருகை தந்து, வாழ்த்துத் தெரிவித்து கொண்டனர். அது மாத்திரமின்றி வானலையுடாக வாழ்த்து தெரிவித்து கொள்ளும் நேயர்களின் தொகை நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துகொண்டு செல்கிறது.

சிவாந்தி தனது இந்த சாதனையூடாக இன்னுமோர் புதிய சாதனையை நிகழ்த்தினார் என்றும் சொல்லலாம். அது என்னவெனில் - இன்று உலகம் பூராக இருக்கின்ற அனைத்து தமிழ் நேயர்களையும் ஓன்றிணைத்திருக்கின்ற பெருமை, செல்வி சிவாந்தியையே சாரும். குறிப்பாக, தாயகத்தின் தேசிய வானொலியாகிய புலிகளின் குரல் உட்பட, உலகில் அனைத்துப் புலம்பெயர் தமிழ் ஊடகங்களின் இணைப்பு ஊடாக, தமிழ் உள்ளங்கள் அனைவரும் வாழ்த்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதேவேளை, இந்தக் கின்னஸ் சாதனையில் ஈடுபட்டிருக்கும் சிவாந்தி - கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பின்வருமாறு -

சிவாந்தி 123 மணித்தியாலங்கள் தொடர்ந்து நிகழ்ச்சியை நடாத்துவதாகத் தீர்மானித்துள்ளார்.

சிவாந்தி கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் மிக, மிக கடினமானது. எனெனில், ஒவ்வோரு 8 மணித்தியாலத்துக்கும் 15 நிமிட இடைவேளை இருக்கின்றது. அவ் இடைவேளை நேரத்தின்பொழுதுதான் அவர் தன்னுடைய உணவு மற்றும் இயற்கை உபாதைகளையும் நிறைவேற்றிக்கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படுகின்றது.

அது மாத்திரமின்றி, ஒவ்வொரு நேயருடனும் உரையாடும் போதும் சிவாந்தி 50 செக்கனிற்கு மேல் மௌனம் சாதிக்கமுடியாது. அது மாத்திரமின்றி, தனக்கு ஓய்வு தேவை ஏற்படின், இடையிடையே 4 நிமிடங்களுக்குக் குறைவான பாடல்களைதான் ஓலிபரப்பவேண்டும். அதிலும் பாடல் ஓலிபரப்பு செய்யும்போது - அப்பாடல் இடம்பெற்ற திரைப்படத்தைத் தவறாமல் குறிப்பிடவேண்டும் மற்றும் ஒலிபரப்புச் சம்பந்தமான அனைத்து தொழில் நுட்பங்களையும் இயக்கவேண்டிய பாரிய பொறுப்பும் சிவாந்தியுடையதே என தெரிவிக்கப்படுகிறது.

சிவாந்தி ஒரு மணித்தியாலத்துக்கு இடையில் ஒரு பாடலை ஓலிபரப்புவது அருமையாகவே உள்ளது. ஏனெனில், நேயர்களது தொலைபேசி அழைப்புகள் இடைவிடாது வந்து கொண்டிருக்கின்றது. காலநேரம் பார்க்காது, உலகம் பூராவுள்ள தமிழ் நேயர்களிடம் இருந்து கிடைக்கும் ஆதரவும் அவருக்கு உற்சாகமூட்டிக் கொண்டிருந்தது.

அவருடன் கடமையாற்றும் கலையக அறிவிப்பாளர்களினது பங்களிப்பு நிச்சயமாக அவர் தனது சாதனையை எட்டிப்பிடித்து, உலகின் முதலாவது பெண்மணி என்ற பெருமையை, எம்தமிழ் மக்களுக்கு பெற்று தருவார் என நம்புகின்றோம்.

# தாய்ப்பால் முதல் முதலுதவி வரை

## நோய்த்தடுப்பு



பலவித நோய்களுக்குத் தடுப்பூசிகள் இப்போது உள்ளன. அவற்றை உரிய காலகட்டங்களில் குழந்தைக்கு கொடுக்கவேண்டியது பெற்றோரின் கடமை.

காசநோய்க்கான தடுப்பு மருந்தை - (BCG) குழந்தை பிறந்த இருவாரங்களுக்குள் கொடுக்கவேண்டும். போலியோ சொட்டு மருந்தை பிறந்ததும் ஒருமுறை, ஆறு, பத்து மற்றும் பதினான்காவது வார இறுதியில் ஒவ்வொருமுறையும், ஒன்றரை வயதில் ஒருமுறையும், நாலரை வயதில் ஒருமுறையும் என்று ஐந்து தடவைகள் அளிக்கவேண்டும். பெரியம்மை நோய்க்கு அடுத்ததாக உலகிலிருந்தே ஒழிக்கப்படவேண்டிய நோய் என்று உலக சுகாதார நிறுவனம் தேர்ந்தெடுத்திருப்பது போலியோவைத்தான்.

முத்தடுப்பு ஊசி என்பது, மூன்று கடுமையான நோயகளைத் தடுக்கிறது. இதையும் ஐந்துமுறை அளிக்க வேண்டும். குழந்தை பிறந்து 6,10,14 வாரங்களின் இறுதியில் ஒவ்வொருமுறையும், 18 ஆவது மாதம் முடியும்போது ஒருமுறையும், ஐந்து வயதை நிறைவு செய்யும்போது ஒருமுறையுமாக அளிக்கவேண்டும்.

எயிட்ஸைவிட அதிகம் பேர் இறப்பது மஞ்சள் காமாலை நோயினால்தான். நல்ல வேளையாக அதற்குத் தடுப்பூசி கண்டுபிடித்து விட்டார்கள். குழந்தைக்கு எவ்வளவு வய தாக இருந்தாலும், இந்தத் தடுப்பு மருந்தை அளிக்கலாம். முதல் ஊசிபோட்ட அடுத்த மாதத்தில் இரண்டாவது [illegible]சியும், முதல் ஊசிபோட்ட ஆறாவது மாதம் மூன்றாவது ஊசியும் கொடுக்கவேண்டும்.

குழந்தைக்கு 9 மாதங்கள் ஆனபின் இன்னோர் தடுப்பு மருந்தையும், ஒன்றேகால் வயதானதும் எம்.எம்.ஆர். எனும் தடுப்பு மருந்தையும் அளிக்கவேண்டும். இரு வருடங்களுக்குப் பிறகு இன்னுமொரு தடுப்பு மருந்தையும், 10 மற்றும் பதினாறு வருடங்களின் முடிவில் டி.டி. நோய்க்கெதிரான தடுப்பு மருந்தையும் அளிக்கவேண்டும். தடுப்பு மருந்தை அளிப்பதற்குமுன், உங்கள் பரம்பரையில் யாருக்காவது வலிப்புநோய் வந்திருந்தால், அதை வைத்தியரிடம் மறக்காமல் கூறுங்கள். அதேபோல் - வயிற்றுப்போக்கு, காய்ச்சல், தடிமன் போன்றவை குழந்தைக்கு அவ்வப்போதிருந்தால், அதையும் மறக்காமல் வைத்தியரிடம் தெரிவியுங்கள். இதனால், ஒருவேளை, வைத்தியர் இந்த தடுப்பு மருந்து அளிப்பதைத் தள்ளிப்போடலாம். காரணம் சிலவகைத் தடுப்பு மருந்துகளுக்குப் பக்க மருந்துக்கு பக்கவிளைவுகள் உண்டு.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*அருமறை சோரும் அறிவிலான் செய்யும்*
*பெருமிறை தானே தனக்கு.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### கலைக்கூடலும் கொலைக் கும்பலும்...

பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளின் - தமிழ் மக்களுக்கு எதிரான அடாவடித்தனங்களுக்கு மீண்டும் தென்பகுதியில் புத்துயிர்ப்பளிக்கும் நடவடிக்கைகள் கடும் முனைப்புடன் மேற்கொள்ளப்பட ஆரம்பித்துள்ளன.

இந்த வெறித்தனமான செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளவர்களில், தென்பகுதி சமூகத்தின் பல்வேறுதரப்பட்ட நிலைகளைச் சார்ந்தவர்களும் உள்ளடங்குவர்.

அரசியல்வாதிகள், அறிவுஜீவிகள், கலைஞர்கள், மந்த புத்தியும் மதவெறியும் கொண்ட பிரமுகர்கள், பௌத்த மதபீடத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களுடன், எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என நினைக்கும் குண்டர்கள், காடையர்கள், ஏனைய பல்வேறுபட்ட சமூகவிரோதசக்திகள் அனைவரும் இந்தக் கும்பலில் அடங்குவர்.

சிறிலங்காவில் உள்ள பேரினவாதத் தலைமைகள்- இவர்களைத் தமது அரசியல் அபிலாஷைகளுக்காகச் சமய மறிந்து பயன்படுதுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் தொலைநோக்குச் சிந்தனையுடன்கூடிய தேசிய நலனிலான அக்கறையோ, தீர்க்கதரிசன நோக்குடனான அரசியல் திறனோ, சமூகப்பொறுப்புணர்வோ, அரசியல் ஆளுமையோ, மக்கள் செல்வாக்கோ, ஆன்மீகத்தெளிவோ, இன்னும் அதிகம் கூறுவதானால், மனிதநேயப்பண்புடன்கூடிய இயல்புணர்வோ கிடையாது.

இவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் - இனவாதமும், மதவாதமும் மட்டுமே! இதனடிப்படையிலேயே, இவர்களின் தமிழர் விரோதச்செயல்கள் யாவும் சிறிலங்காவில் அரங்கேறி வருகின்றன...

சிங்கள அரசபீடங்கள் இவர்களுக்கு அஞ்சுகின்றன.

பௌத்த மதபீடங்கள் இவர்களை ஆசீர்வதிக்கின்றன.

இதுவே அவர்களின் ஒரே பலமும், முழுமையான பலவீனமுமாகும். அமைதியையும், சமாதானத்தையும் நேசிக்கும் தென்னிலங்கை மக்களும், ஏனையசக்திகளும் இவர்களை எவ்வாறு புறக்கணித்துத் தூக்கி எறிந்திருக்கிறார்கள் என்பதை இந்த இனவாத அரசியல் கட்சிகளுக்கு- தென்பகுதி மக்கள் ஒட்டுமொத்திமாக கடந்த தேர்தலில் அளித்த வாக்குகளின் தொகையைப் பார்த்துப் புரிந்துகொள்ளலாம்.

இவர்கள் பின்னால் நியாயபூர்வமாக, மனிதாபிமானத்துடன் சிந்திக்கும் எந்த மனிதரும் அணிதிரள்வதில்லை.

அதனால், அத்தகையோரை இவர்கள் தேசத்துரோகிகள் என்று பட்டம்சூட்டி விடுகிறார்கள்.

சிறிலங்காவின் தேசபக்கதர்கள் தாங்கள் மட்டுமே எனப் பிரகடனமும் செய்துகொள்கிறார்கள்.

இதுவே, நகைப்புக்கிடமான விடயமாகும்...!

தமிழ்மக்களையும், விடுதலைப் புலிகளையும் எதிர்ப்பதையும், சமாதானத்தையும், அமைதியையும் நிராகரிப்பதையும் மட்டும் தேசபக்தி என்று, சிங்கள மக்களுக்கு உணர்த்துவதன்மூலம், அவர்களின் இனவுணர்வைத் தூண்டி, குழப்பத்தை எற்படுத்தி, அதன்மூலமே தாங்கள் இருப்பை உணர்த்த நினைக்கும் இவர்கள்தான், உண்மையில் தேசவிரோதிகள் என்பதை பாமர பெரும்பான்மையின மக்கள் மட்டுமல்ல, சில அறிவுஜீவிகளும் நம்பி, அவர்களின் பின் செல்வதுதான் பரிதாபகரமானதாகும்.

நேற்றுமுன்தினம், கொழும்பில் நடைபெற்ற தமிழ்- சிங்கள கலைக்கூடல் நிகழ்வில் உட்புகுந்து, காடைத்தனம் புரிந்தவர்களின் உள்நோக்கம் - ஒரு இனக்கலவரத்தை ஏற்படுத்தி, சமாதான சூழலைக் குழப்பி, மீண்டும் சிறிலங்காவின் இனவெறித் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்வதேயாகும்.

இதற்குக் காரணமான சிஹல உறுமயக் கும்பலைப்பற்றி யாருக்கும் விளக்கம் அளிக்கவேண்டிய அவசியம் இல்லை. ஒரு காலத்தில் பச்சை இனவாதம்பேசிய - ஜாதிக விமுக்தி பெரமுன என்ற சிங்களக் கட்சியின் தலைவரான - கே.எம்.பி.ராஜரத்னாவை தமது அரசியல் குருவாக்கிக்கொண்டுள்ள இவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதை தென்பகுதி மக்களே அறிவர்.

கண்ணியமான, ஜனநாயகரீதியிலான அரசியலில் கால் ஊன்றமுடியாத இவர்கள், இனவாத அரசியலைத் தேர்ந்தெடுத்ததில் வியப்பில்லைத்தான்.

தமிழ் - சிங்களக் கலைக்கூடலை- பொங்கு தமிழ் நிகழ்வுடன் ஒப்பிட்டு, புலிகளின் நிகழ்வாகச் சித்தரிக்க முயன்ற இவர்கள் தங்களின் காடைத்தனத்தின் மூலம் சிங்கள மக்களுக்குத்தான் தங்களின் மறுமுகத்தை தெளிவுபடுத்தியுள்ளார்கள் என்பதே உண்மை.


கலைக்கூடலை கொலைக்கூடலாக மாற்றமுயன்ற இவர்களின் நிலை பரிதாபமானது என்பது எமக்குத் தெரியும்.

ஆனால், தென்னிலங்கையின் சமாதான ஆர்வலர்கள் இந்த அநாகரிகச் சம்பவத்திற்கு என்ன பிரதிபலிப்பைக் காட்டப்போகிறார்கள் என்பதுதான் கேள்வி.

இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள், அதில் பங்கு கொண்டவர்கள், அதனைப் பார்வையிடவந்தவர்கள் அனைவரும்- இனங்களுக்கிடையேயான நல்லுறவை வளர்க்கமுயலும் நாட்டின் அறிவுலகைச் சார்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

குழப்பம் விளைவித்த கும்பல் - இவர்களைத் தேசத்துரோகிகள் என்றேகூறிக் கோஷமிட்டுள்ளது. அப்படியெனின், சிறிலங்காவில் குண்டர்களும், குழப்பவாதிகளும், சமூகவிரோதிகளும்தான் தேசபக்தர்களா?

## நாடும் நடப்பும்




# புலிகளின் திட்டவரைபின் பிரதியை ஹக்கீமுக்கு பிரதமர் கையளிப்பார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால திட்டநகல் தொடர்பான பரிந்துரையின் பிரதியொன்றை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமிடம் - பிரதமர் கையளிக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள், இடைக்காலத் திட்டநகல் ஒன்றினை நோர்வேத் தூதுவர் ஊடாகப் பிரதமர் ரணில் வீக்கிரமசிங்கவுக்குக் கையளிக்கவுள்ளனர்.

இந்தத் திட்டநகலின் பிரதியொன்றினை அமெரிக்காவிற்குச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஹக்கீமிடம் கொடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, விடுதலைப்புலிகள் தமது திட்டநகலை முன்வைத்தபின்னர் செய்தியாளர் மாநாடொன்றையும் கிளிநொச்சியில் நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இடைக்கால நிர்வாகம் தொடர்பாகத் திட்டநகல் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இந்தத் திட்டநகல் தொடர்பான பேச்சுவார்தைகளில் இருதரப்பையும் ஈடுபடச்செய்யும் நோக்கில், எதிர்வரும் 2 ஆம் திகதி எரிக் சொல்ஹெய்ம் கொழும்புக்கு வரவிருக்கின்றார் என்றும் அறிவிக்கப்படுகிறது. (01)

## மாணிக்கக்கல் வியாபாரியை காணவில்லையென முறைப்பாடு

பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்க வர்த்தகர் ஒருவர் பேருவளையிலிருந்து கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது இல்லத்தை நோக்கி பஜிரோ ஜீப் வண்டியில் வந்துகொண்டிருந்தபோது கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது.

சீனன்கோட்டையைச் சேர்ந்த இஸ்மத் ஜாபீர் (வயது 55) என்ற மாணிக்க வர்த்தகரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி மாலை 5 மணியளவில் சீனன்கோட்டையில் உள்ள அவரது தாயாரின் வீட்டிலிருந்து கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது சொந்த வீட்டிற்குச் சென்றிருந்தார். அவர் தனது வாகனத்தை செலுத்திசென்றமையும் பம்பலப்பிட்டிச் சந்தியை அவர் தாண்டிச் சென்றமையும் சீனன்கோட்டையைச் சேர்ந்த மற்றுமோர் வர்த்தகர் அவதானித்துள்ளார். பம்பலப்பிட்டி சந்தியைக் கடந்த அவர் கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது வீட்டிற்கு வந்துசேரவில்லை என உறவினர்கள் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (01)

## நிதிமோசடி செய்த வங்கி அதிகாரிக்கு சிறை!

(கொழும்பு)

இலங்கை வங்கி அதிகாரி ஒருவர் செய்த மோசடிகள் தொடர்பாக, அவருக்கு 15 வருட கடுழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பு மேல்நீதிமன்றம், இந்தத் தீர்ப்பை அளித்துள்ளது.

இந்த வங்கியின் அதிகாரி மீது மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் விசாரணையை மேற்கொண்ட நிதிமன்றம், அவருக்குரிய தண்டனையை வழங்கியுள்ளது.

ஏற்கனவே ஏனைய இரண்டு குற்றச்சாட்டுகள் தொடர்பாக இவருக்கு தலா இருபது வருடங்கள் மற்றும் 18 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து, இலங்கை வங்கியிலிருந்து சுமார் 3 கோடி ரூபாவைக் கையாடல் செய்துள்ளார் என்று இவர்மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது. (01)

# வைத்தியர்கள், தாதிகள் தொழிற்சங்கப்போராட்டம் 23 இருதய நோயாளர்கள் ஆபத்தானநிலையில்!

(கொழும்பு)

காலி-கராப்பிட்டிய வைத்தியசாலையில் - வைத்தியர்கள் மற்றும் தாதியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்தால் 23 இருதய நோயாளிகளுக்கான சத்திரசிகிச்சைகள் தாமதமடைந்து வருகின்றது.

தமக்கு விசேட கொடுப்பனவை வழங்கவேண்டுமெனக் கூறி, கராப்பிட்டிய வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த சத்திரசிக்சை நிபுணர்கள் மற்றும் தாதியர்-தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இந்த வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைக்குட்படுதப்படவேண்டிய 18 சிறுவர்கள் உட்பட 23 நோயாளிகள் காத்திருக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. சத்திர சிகிச்சை தாதமதமடைந்துவருவதால், இந்த நோயாளிகள் மரணமடையக்கூடிய ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சத்திரசிகிச்சைகள் தாமதமடைவதால், சமீப நாட்களில் மட்டுமே 5 நோயாளிகள் இறந்து விட்டனரென அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புஷ்மாஸ்ரர் பீரங்கிகள் கொள்வனவிற்காக அமெரிக்கா சென்றுள்ள கடற்படைத்தளபதி!

இலங்கைக் கடற்படையின் அதிவேக தாக்குதல் கலங்களைப் பொருத்துவதற்காக - 30 மில்லி மீற்றர் புஷ்மாஸ்ரர் பீரங்கிகளை, அமெரிக்காவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளில் கடற்படைத்தளபதி ரியர் அட்மிரல் தயாசந்தகிரி. நேரடியாக ஈடுபட்டுள்ளார்.

தற்போது வொஷிங்டனில் தங்கியுள்ள கடற்படைத்தளபதி தயாசந்தகிரி- புஷ்மாஸ்ரர் பீரங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாகக் கடற்படை வட்டாரங்கள் தகவல் தருகையில் - ஆழ்கடல் நடவடிக்கைகளுக்குத் தேவையான புஷ்மாஸ்ரர் பீரங்கிகளை - அமெரிக்காவிடம் இருந்து கொள்வனவு செய்வது தொடர்பான ஒப்பந்தத்தில் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் தயாசந்தகிரி கைச்சாத்திடுவார் என்று தெரியவருகின்றது.

முன்னதாக இதேரகத்தைச் சேர்ந்த பீரங்கிகளை - இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்யக் கடற்படை தீர்மானித்திருந்தபோதும், புஷ்மாஸ்ரர் பீரங்கிகளைக் குறித்த விலைக்கு வழங்க அமெரிக்கா தயாராக இருந்ததால் - இஸ்ரேலிடமான கொள்வனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்காவிடம் வாங்கப்படவுள்ள புஷ்மாஸ்ரர் பீரங்கிகளை - கடற்படையின் அதிவேகத் தாக்குதல் படகுகளில் பொருத்தப்பட்டிருக்கும் 23 மி.மீ பீரங்கிகளுக்குப் பதிலாகப் பொருத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தற்போது வொஷிங்டனில் தங்கியுள்ள கடற்படைத்தளபதி தயாசந்தகிரி, அங்கு நடைபெறவுள்ள இராணுவக் கண்காட்சி ஒன்றிலும் பங்குபற்றவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## துப்பாக்கிகளைத் தயாரித்த பாதாள உலகத்தலைவர்கள் கைது!

கழுத்துறை மற்றும் பாணந்துறைப் பகுதிகளின் சட்டவிரோதமாக ஆயுதங்களைத் தயாரித்து விற்பனை செய்து வந்த பாதாள உலகத் தலைவர்கள் இரண்டுபேரைப் பொலிஸார் கைது செய்திருப்பதாகக் குற்றத்தடுப்புப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவர்களிடமிருந்து பெருமளவு சட்டவிரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

கழுத்துறையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், 10 மீன்பிடி றோலர்களுக்குச் சொந்தக்காரர் என்றும் தெரியவந்துள்ளது. இவரிடம் இருந்த இந்தப் புதிய 0.45 பிஸ்டல் மற்றும் ரவைகள், 0.38 றிவோல்வர் ஆகிய ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவர் பிஸ்டல் ஒன்றை ஒருலட்சம் ரூபாவுக்கும், றிவோல்வர் ஒன்றை 60 ஆயிரம் ரூபாவிற்கும் விற்பனை செய்துள்ளதாகத் பொலிஸார் தெரிவித்தனர்.


# இந்த வரர பலன்கள்

## 31.10.2003 ~ 06.11.2003 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| செவ் யுரே | 31 கா. 9-04 மக-சந்<br>02 ப. 2-36 கும்-சந்<br>04 இ. 11-13 மீன-சந் | | |
| நெப் | | | குரு |
| | சுக் | சூரி புத கேது | |

### மேடம்

*([illegible] பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



இவ்விராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பலவகையான நற்பலன்கள் காட்டும். தொழிற்துறையில் வருமானமும், முன்னேற்றமும் ஏற்படும். பொருளாதார நிலை திருப்தியாக இருக்கும். கொடுக்கல் - வாங்கல் பிணக்குகள் இருப்பின், அவை நீங்கும். பிள்ளைகள், நண்பர்களின் உதவிகள் கிட்டும். வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடக்கும். மகிழ்ச்சியும், கலகலப்பும் காணப்படும். தூரதேசப்பிரயாணத்தை எதிர்நோக்குவோர் நன்மை பெறுவர். இல்லறத்தில் இணைய விரும்புவோர் சற்று தாமதத்தின் மேல் நற்பலன் காண்பர். உத்தியோகத்தை எதிர்பார்ப்போருக்குத் தொழில் கைகூடும். வியாபாரிகள்-வியாபாரம் மூலம் பணம் சம்பாதிப்பார். புதிய முதலீடுகள் செய்யவும் நன்று. மாணவர்கள் பரீட்சையில் சித்தியும், பாராட்டும் பெறுவர்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இவ்வாரம் நன்மை, தீமை கலந்த பலன்கள் ஏற்படும். தொழில்முயற்சிகள் பிரயாசை அதிகமாகும். செலவுகள் கட்டுக்கடங்காமல் கூடிக் கொண்டுபோகும். தொடங்கும் கருமங்கள் தாமதத்தின் மேல கைகூடும். வீண் விஷயங்களில் தலையிடாமல் சொந்தக் கருமத்தில் கண்ணாக இருப்பது நன்று. தூரத்து உறவினர்களின் உதவி உண்டு. தேக சுகத்தைப் பேணுதல், செலவீனங்களைக் குறைக்க உதவும். பிரயாணங்களில் புதிய அனுபவங்கள் ஏற்படலாம். உத்தியோகத்தர்கள் மிகுந்த வேலைப்பழுவைச் சமாளிக்கவேண்டியிருக்கும். வியாபாரத்துறையிலுள்ளோர் சிரமத்துடன் தொழில நடத்தவேண்டியிருக்கும். விவசாயத்துறையினர் கூடிய லாபம் காண்பர். மாணவர்கள் கல்வித்துறையில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுன இராசிக்காரருக்கு இவ்வாரம் சிறப்பாக அமையவில்லை. எப்படி முயன்றாலும் தொழில் முன்னேற்றம் காண்பது கடினம். செலவுகள் அதிகரித்துக் காணப்படும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். வைத்தியச் செலவுகளும் தன்னையறியாமல் கூடுதலாகக் காட்டும். குடும்பத்தில் மனக்கசப்புக்கள் காட்டக்கூடும். பிள்ளைகளால் உதவி கிடையாது. மறைமுக எதிரிகள்பற்றி அவதானமாக இருக்கவும். கடன் தொல்லைகளும் தலைதூக்கும். பிரயாணத்தை எதிர்நோக்குவோர் ஏமாற்றம் அடைவர். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமாவதுடன், மேலதிகாரிகளின் வெறுப்புக்கும் ஆளாக நேரிடும். மாணவர்கள் கல்வியில் பின்னடைவைக் காண்பர்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



இந்த இராசிக்காரர்களுக்கு இவ்வாரம் முன்னேற்றமான பலன்களை எதிர்பார்க்கலாம். தொழில் முன்னேற்றமும், வருவாயும் அதிகரிக்கும். தொடர்ந்தும் கருமங்கள் அனுகூலமாகும். தூர தேசத்திலிருந்து சுபசெய்திகள் கிட்டும். உறவினர்களின் வருகையால் வீட்டில் குதூகலமும், மகிழ்ச்சியும் காணப்படும். தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் அடிக்கடி ஏற்படலாம். மங்கள வாழ்வில் இணைய விரும்புபவர்களுக்கு கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு விரும்பிய இடமாற்றம், வசதிக்கேற்ற தொழில்கள், வியாபாரிக்ளுக்கு பழைய முதலீடுகள் விற்பனையாகி பணமசேரும். விவசாயிகளும் தமது பொருட்களை சந்தைப்படுத்தி இலாபம் பெறுவார். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கமும் சித்தியும் உண்டு.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்க இராசிக்காரர்களுக்கு செய்தொழில் சிறப்பும், வருவாயும் நன்றாக அமையும். எனினும் மனநிம்மதிக்குறைவும், அதிக செலவுகளும் இருக்கும். குடும்பத்தில் சில சுகக்குறைவுகள் காட்டும். இனஜன பந்துகளிடையே கருத்துவேற்றுமைகள் ஏற்பட இடமுண்டு. ஆடம்பர பொருட்கள் வாங்குவதில் கூடுதலாக ஈடுபடுவர். பிரயாணங்களின்போது பொருட்கள் தவறிவிடக்கூடும். அவதானம் தேவை. காதல் விவகாரங்கள் தாமத்தையே காட்டும். தனித்தொழில் புரிவோருக்கு வேலையாட்களின் ஒத்துழைப்பு கிடையாமல் போகலாம். வியாபாரிகள் முயற்சிக்கேற்ற இலாபம் பெறுவர். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

### கன்னி


*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்கள் வழமையான தொழிலில் முன்னேற்றமும், இலாபமும் காண்பர். வருவாய்க்கேற்ற செலவு செய்தால் சிரமங்கள் ஏற்படாமல் தவிர்க்க முடியும். எவரிடமும் நம்பி எந்தப் பொருளையும் கொடுக்கல் ஆகாது. திரும்பப் பெறுவது கடினம். தேகசுகம் பாதிப்படையாது. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர், நண்பர்கள் தொடர்புகள் வலுப்பெறும். இல்லறத்தில் இணையவிரும்புவோர் கருமம் கைகூடப்பெற்று மகிழ்ச்சியுடன் காணப்படுவர். உத்தியோகத்தை விரும்பும் இளைஞர்களுக்கும் நற்பலன்கள் கிடைக்கும். வியாபாரிகள் தமது முயற்சிக்கேற்ப இலாபத்தை ஈட்டுவர். புதிய முதலீடுகள் செய்வதை பின்போடுதல் நன்று. மாணவர்கள் ஊக்கமெடுத்தால் முன்னேற்றம் நிச்சயம் கிட்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசிக்காரர்களுக்கு பல சிறப்பான பலன்கள் காத்திருக்கின்றன. தொழில் எதிர்பாராதவாறு முன்னேற்றமடையும். பரிசுகள் போன்று தீடீர் வருவாய்கள் கிட்டும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். பல எதிர்ப்புக்களை சமாளித்து, முன்னேறக்கூடியதாக இருக்கும். பகைமை காரணமாக தூரத்தில் விலகி இருந்தவர்களும் சிநேகம் பாராட்ட வருவார்கள். இனத்தவர்களிடையே நல்லுறவு வலுக்கும். புதிதாக தொழிலில் சேர்ந்தவர்களுக்கு வசதியும், பொறுப்புகளும்கூடும். வெளிநாட்டுப்பிரயாணத்தை எதிர்பார்த்தவர்கள் அனுகூலம் அடைவார்கள். வியாபாரிகளுக்கு விற்பனை சிறந்து, பணம் சேரும். மாணவர்களுக்கு பரீட்சைகளில் சித்தி, பாராட்டுகள் உண்டாகும்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்களுக்கு செய்தொழில் நன்றாக இருப்பினும், அதற்கேற்ற வருவாய் கிடைப்பது கஷ்டம். எவ்வளவு சிரத்தை எடுத்து முயற்சித்தாலும், லாபமில்லை. செலவுகள் வரவிலும் பார்க்க கூடிக்கொண்டிருக்கும். பிள்ளைகள், நண்பர்களின் உதவியும் தேவைக்கு வந்து சேராது. நிம்மதிக் குறைவும், விரக்தியும் மனதைப் புண்படுத்தும். தேகாரோக்கியத்தையும் பாதிக்கக் கூடும். அநாவசியமான விஷயங்களில் தலையிடுவதால் வீண்பிரச்சினைகளும் உருவாகலாம். எதிலும் அவதானந்தேவை. தூரதேச பிரயாணத்தை முயற்சிப்பவர்கள் தோல்வியையே காண்பர். குடும்ப ஒற்றுமையிலும் விரிசல் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாகவேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கும் எப்படி முயன்றாலும் நட்டமே காட்டும். மாணவர்களுக்கும் ஊக்கம் தேவை.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுராசியினருக்கு, இவ்வாரம் பல நன்மைகள் தேடி வரும். செய்தொழிலில் கூடிய லாபம்கிட்டும். பலராலும் வரவேற்கப்படுவார்கள். தேகாரோக்கியம், குடும்பநிலை சிறப்பாக அமையும். இனபந்துக்களின் வருகை மகிழ்ச்சியைத்தரும். ஆடம்பரப் பொருட்களை வாங்கி வீட்டை அலங்கரிப்பர். கடன் தொல்லைகள் ஏதும் இருப்பின் அவைதீரும். இல்லற வாழ்வில் இணைய விரும்பும் தம்பதியினர், கருமம் கைகூடி மகிழ்ச்சியில் திளைப்பர். தூரதேசப் பிரயாணங்களும் அனுகூலமாகவரும். உத்தியோகத்தர் தமது கருமத்தைச் சிறப்பாகச் செய்து பாராட்டுக்களைப் பெறுவர். தோட்டத் தொழிலாளர்களும் கூடிய பயனைப் பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் லாபகரமாக நடக்கும். மாணவர்களுக்கும் பரீட்சையில் சித்தி, பாராட்டுக்கள் கிடைக்கும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு இந்த வாரம் நன்மை தீமை கலந்த பலன்களையே காண்பர். தொழிற்துறையில் பிரயாசை கூடுதலாக இருக்கும். எனினும் வருவாய் பாதிப்பில்லை. தொடங்கும் கருமங்கள் தாமதமாகவே நிறைவு பெறும். கொடுக்கல் வாங்கல்களில் பிணக்குகள் தலைதூக்கும். இடையிடையே தேகசுகமும் பாதிக்கப்படும். வாகனம் செலுத்துவோர் விபத்து, பற்றி அவதானமாக இருக்கவேண்டும். இனபந்துக்களிடையே காணித் தகராறுகள் ஏற்படலாம். புதிதாக உத்தியோகத்தை நாடுவோருக்கு காலதாமதம் ஏற்படும். நண்பர்களால் உதவி கிட்டும். திருமணத்தை எதிர்பார்ப்போருக்கும் தாமதத்தின் பின்னே நிறைவேறும். வியாபாரிகளும் தமது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவது கஷ்டம். மாணவர்களுக்கு உதவி கொடுத்தால் முன்னேற்றமடைவர்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*



கும்பராசியில் ஜெனனமானவர்களுக்கு செய்தொழில் லாபம் கிட்டும். பல முன்னேற்றமான கருமங்களில் ஈடுபடுவார்கள். தேகசுகம், குடும்ப சுகம் என்பன நன்றாக இருக்கும் பிறநாட்டில் வசிப்பவர்களாகிய உறவினர்களால் உதவி உண்டு. புதிய முயற்சிகளால் போதிய இலாபம் கிடைக்கும். பலராலும் மதிக்கப்படுவார்கள். வீட்டில் மகிழ்ச்சியும் குதூகலமும் காணப்படும். சுபகருமங்கள் நிகழும். பிரயாணங்களை எதிர்கொள்வோர் நற்பலன் காண்பர். வியாபாரிகள், விவசாயிகளுக்கு தேங்கியிருந்த முதலீடுகள் விற்பனையாகி, போதிய இலாபம் கிடைக்கும். மாணவர்களுக்கும் பரீட்சைகளில் சித்தியுண்டு.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தரட்டாதி, ரேவதி)*



மீனராசிக்காரர் வார முற்பகுதியில் தொழில் முன்னேற்றம் காண்பர். நினைத்தவாறு கருமங்களைச் சாதிக்கமுடியும். தனித்தொழில் நடத்துவோர், தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதால் முன்னேற்றம் காண்பர். எனினும் வருவாயிலும் பார்க்க செலவு கூடிக் கொண்டேபோகும். தேகாரோக்கியம், குடும்பஉறவு என்பன பாதிப்படையாது. மறைமுக எதிர்ப்புக்களைப் பற்றி அவதானமாக இருத்தல் வேண்டும். இனபந்துக்களிடையே சில கருத்து வேற்றுமைகள் இருப்பினும், அவை சீர் செய்யப்படும். உத்தியோகத்தர்கள் தமது விருப்பப்படி கருமங்களை ஆற்ற ஏதுவாகஇருக்கும். வியாபாரிகள் தமது பொருட்களை நல்ல விலைக்கு விற்று இலாபமடைவர். திருமணம் முதலியன தாமதத்தின் மேல் நிறைவுபெறும். மாணவர்களுக்கு விளையாட்டுக்களில் வெற்றியும், கல்வி முன்னேற்றமும் உண்டு.

# மின் இணைப்பினை வழங்குவதில் அரியாலை மக்கள் புறக்கணிப்பா?

2000 ஆம் ஆண்டு - இடம்பெற்ற யுத்த அனர்த்தத்தினால் மக்கள் இடம்பெயர்ந்து, மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி, ஒரு வருடத்திற்கு மேலாகியும், அரியாலை, நெடுங்குளம் சந்திப் பகுதியிலிருந்து - அரியாலைச் சந்திக்கு இடைப்பட்ட ஏ-9 தர வீதியில் வசிக்கும் மக்களுக்கு, மின் விநியோகத்தை வழங்குவதில் மின்சாரசபை ஊழியர்கள் அக்கறையீனமாக செயற்படுகிறார்கள்.

இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற யுத்தஅனர்த்தத்தினால், இந்தப் பிரதேசமானது, பற்றைக் காடுகள சூழ்ந்த பிரதேசமாகக் காணப்படுகின்றது. எனவே இரவு வேளைகளில் பாம்புகள், பூச்சிகளின் தொல்லைகள் தாங்கமுடியாதிருப்பதுடன், திருடர்களின் கைவரிசையும் அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன் மாணவர்கள் தமது கல்வியைத் தொடருவதில் மின்தடை ஒரு இடையூறாக அமைகிறது.

நாம் பலதடவைகள் மின்சார சபை அலுவலகத்திற்கு சென்று முறையிட்ட போதிலும், அவர்கள் அசண்டையீனமாக காணப்படுகிறார்கள்.

ஆனால், தென்மராட்சி பிரதேசத்திற்கு இந்த வீதி வழியாகவே பிரதான இணைப்பினூடாக மின் விநியோகம் வழங்கப்படுகிறது. அத்துடன், அரியாலையில் ஏனைய இடங்களிற்கும் மின்விநியோகம் வழங்கப்பட்ட போதிலும், இந்தப் பிரதேசத்தை மட்டும் புறக்கணிப்பது ஏன்.

இவ்வளவு காலமும் மிதிவெடி அபாயம் என கூறினார்கள். ஆனால், மிதிவெடி அகற்றப்பட்டு பல மாதங்கள் கழிந்த நிலையிலும், மின் இணைப்பை வழங்காததினால், மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்க நேரிடுகிறது. எனவே இதனை உரிய அதிகாரிகள் கருத்திற்கொண்டு -

உடனடியாக மின்வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.



செய்திக் கட்டுரை

**அரியாலை மக்கள்**

# அமைச்சுக்களுக்கு உதவிச் செயலாளர்கள் நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம்!

அமைச்சுக்கள் ஒவ்வொன்றிற்கும் உதவிச் செயலாளர்கள் நியமிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான தீர்மானம் ஒன்று அமைச்சரவையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரதமரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, புதிய உதவிச் செயலாளர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள்.

இதுவரை காலமும் அமைச்சின் செயலாளர்கள், நிதி மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தி வந்தார்கள் அவர்களிடையே காணப்பட்ட அந்தப் பொறுப்புக்களை, புதிதாக நியமிக்கப்படவுள்ள உதவிச் செயலாளர்களே இனிக்கவனிப்பார்கள் என்று தெரிவிக்கப்டுகிறது. சரியான முறையில் அமைச்சினை வழிநடாத்துவதற்காகவே, இந்த உதவிச் செயலாளர்களின் நியமனம் எனக் கூறப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக - உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, சுகாதார அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கு இந்தப் புதிய உதவிச் செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள். பின்னர் சகல அமைச்சுக்களிலும், உதவிச் செயலாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (01)

# மிதிவெடிகள் அகற்றப்படாததால் விவசாயம் செய்யமுடியாத நிலை

அரியாலை கொட்டுக்கிணற்றடிப் பிள்ளையார்கோவில், ஈச்சங்காடு ஆகிய பகுதிகளில் உள்ள வயல்களில் விவசாயம் செய்வதற்கு, இராணுவத்தினர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் அனுமதி வழங்கியிருந்த போதும் அப்பகுதிகளில் உள்ளதாகக் கருதப்படும் மிதிவெடிகள் இன்னும் அகற்றப்படாததால் இவ் வருடமும் விவசாயம் செய்யமுடியாது என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (55)

# மலேசியப் பிரதமர் மகதீர் மொகமட் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறார்!

கடந்த 22 ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த மலேசியப் பிரதமர் மகதீர் மொகமட் இன்றுடன் பதவியிலிருந்து ஓய்வுபெற்று, தற்போதைய துணைப் பிரதமர் அப்துல்லா படாவியிடம் தனது பதவியைகையளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - நேற்று மலேசிய தேசிய அமைப்பின் உயர்குழுவின் கூட்டத்தில், தனது பதவியை உதவிப் பிரதமர் அப்துல்லா படாவியிடம் கையளிப்பது தொடர்பாக தனது கருத்தை மொகமட் வெளியிட்டார்.

அண்மையில் பிரதமர் மொகமட் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ரின் எனப்படும் உலோகத்தையும், இறப்பரையும் உற்பத்தி செய்யும் நாடாக விளங்கிய மலேசியா இன்று கைத்தொழில் நாடாக அபிவிருத்தியடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

## இரண்டு மாதங்களுக்கு முன்னர்

# நேபாளத்தில் போர்நிறுத்தமீறல் 1000 இற்குமேல் மக்கள் பலி!

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நேபாளத்தில் தீவிரவாதிகள் தமது போரை நிறுத்திய 60 நாட்களில் 1000 த்திற்கு மேற்பட்ட மக்கள் மரணமடைந்துள்ளதாக, மனித உரிமை அமைப்பு அறிவித்துள்ளது.

இறந்தவர்களில் மூன்றில் இரண்டு பங்கினரது மரணத்திற்கு பாதுகாப்புப் படையே காரணமாக அமைந்ததாகவும் - மிகுதித்தொகையினரை மாவோ தீவிரவாதிகள் கொலை செய்துள்ளதாகவும் - அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.



இதனிடையே, படையினரால் கைது செய்யப்பட்ட பலரின் இருப்பிடங்களை அறியமுடியாதிருப்பதாகவும் - இதேபோன்று அரசியல் சமூகப்பணியில் ஈடுபாடுகொண்ட பலரை மாவோ தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளதாகவும், நேபாளத்திலுள்ள மனித அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# ஈராக் தொடர்பாக சேகரித்த புலனாய்வு தகவல்களை தம்மிடம் ஒப்படைக்குமாறு செனட்சபை கோரிக்கை!

அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத்துறையை 48 மணிநேரத்திற்குள் ஈராக் தொடர்பாக சேகரித்த புலனாய்வு அறிக்கைகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு, செனட்சபையில் உள்ள புலனாய்வுக் குழு கேட்டிருந்ததாக- அமெரிக்க பத்திரிகை தெரிவித்திருந்தது.

செனட் சபையில் புலனாய்வுக் குழுவினர் வெளியிடவுள்ள அறிக்கையில் மத்திய புலனாய்வுத் துறையின் தலைவர் "யோச் ரெனெட்" ஐ விமர்சிப்பதாகவுள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது.

ஈராக்கின் மீதான போர் தொடர்பாக அமெரிக்க மக்களிடையே சேகரிக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் அரசிற்கான செல்வாக்கை மிகவும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது.



மேலும் அமெரிக்க படையினர் ஈராக்கில் தொடர்ந்து கொல்லப்படுவதும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஈராக்கில் தமது பணியாட்களை குறைப்பதற்கு திட்டமிட்டுள்ளமையும் அதிபர் புஷ் மீது பலமான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனிடையே காங்கிரஸ் இரு சபைகளிலும் ஈராக்கின் கட்டுமான பணிக்கு தேவைப்பட்ட 20 மில்லியன் டொலர்களையும், நிதியாக வழங்க சம்மதத்தை கொடுப்பதற்கு முன்வந்துள்ளது.

முன்னர் அரைப் பகுதியை கடனாக வழங்குவதற்கு சம்மதித்திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## கொங்கோவிலுள்ள

# சர்வதேச கனிவள அகழ்வு நிறுவன செயற்பாடுகளை ஐ.நா.சபை ஆராயும்

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் சர்வதேச கனிவள அகழ்வு நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபை தமக்கு கிடைத்துள்ள அறிக்கையை ஆலோசிக்க திட்டமிடடுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் சபை பிரத்தியேக ஆணைக்குழு ஒன்றை நியமித்து, சர்வதேச கனிவள அகழ்வு நிறுவனங்களின் உண்மையான பணி தொடர்பாக அறியமுற்பட்டிருந்தது. இதன் மூலம் கொங்கோவில் உள்ள அரசிற்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு கொங்கோவின சட்டத்திற்கு மாறான முறையில் அகழ்வுசெய்யப்பட்ட கனிவளங்கள்மூலம் கிடைத்த பணம் பாவிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது.



ஐக்கிய நாடுகளின் சமாதானப் படை கொங்கோவில் தீவிரவாத குழுக்களுக்கெதிராக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்தோனேஷிய உல்லாசவிடுதி தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதி கைதுசெய்யப்பட்டார்

இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் அமைந்துள்ள மற்றியோட் உல்லாச விடுதிமீது, ஆகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் தொடர்புடைய ரோகீர் எனப்படும் தீவிரவாதியை கைது செய்துள்ளதாக இந்தோனேஷியப் பொலிஸ் அதிகாரி பக்தியார் தெரிவித்தார். தென்கிழக்கு ஆசியாவில் தேடப்பட்டுவந்த, முக்கியமான ஐந்து போராளிகளில் ரோகிரும் ஒருவர் என - அந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இவருடைய நண்பரான ஸ்மெயிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றிற்கு தம்மை தயார் செய்துகொண்டிருந்தவேளையில், கைதுசெய்யப்பட்டதாக -

பொலிஸ் அதிகாரி பக்தியார் தெரிவித்தார்.

## பாக்.எதிர்க்கட்சித் தலைவர் கஷ்மி

# போலியான ஆவணத்தைத் தயாரித்து இராணுவத்தை அவதூறு தெய்தாராம்!



பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் கஷ்மி போலியான ஆவணங்களைத் தயாரித்து இராணுவத்தை அவதூறு செய்ததாக, குற்றம் சுமத்தப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கிற்கு பாகிஸ்தான் இராணுவத்தை அனுப்புவதற்கு அமெரிக்கா கோரிய அனுமதியை எதிர்க்கட்சியினர் தடைசெய்ததை அடுத்து பாகிஸ்தான் இராணுவம் - கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாக போலிக் கடிதம் ஒன்றை தயாரித்தார் என, எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

அக் கடிதம் பாகிஸ்தான் இராணுவத்தின் முத்திரை பொறிக்கப்பட்ட காகிதத்தில் எழுதப்பட்டிருந்தது. இக் கடிதத்தில் ஆப்கானிஸ்தானுக்கெதிராக அமெரிக்காவின் கருத்துக்கு முஷாரப் ஆதரவு கொடுத்ததாகவும், இராணுவம் முஷாரப்பை கண்டித்ததாகவும் எழுதப்பட்டுள்ளது. மேற்படி போலிக் கடிதத்தை தயாரித்ததற்காகவே இவர் கைதுசெய்யப்பட்டார்.

## சதாமின் சொந்த இடமான திக்கிரிட்டில்

# அமெரிக்கப் படையினர் திடீர் சோதனை பலர் கைது செய்யப்பட்டு தடுத்துவைப்பு!



ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாமின் சொந்த ஊரான திக்கிரிட்டில் அமெரிக்கப் படையினர் நடத்திய திடீர் சோதனை நடவடிக்கையின் போது, பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக, ஈராக்கில் நடைபெற்றுவரும் தாக்குதல்களுக்கு இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்களே திட்டங்களைத் தீட்டுவதாக அமெரிக்க அதிகாரியான ஸ்ரீவ் ரசெல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சதாமின் ஆட்சிக் காலத்தில் கடமையாற்றிய உயரதிகாரிகள் - தற்போதைய தாக்குதலுக்கு உதவி வருவதாகவும், இவர்களில் இப்ராஹிம் என்பவர் முக்கியமானவராகக் கருதப்படுவதாகவும்அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.


தற்போது - அமெரிக்கப் படையினர் ஈராக்கில் பேராபத்தைத் தரும் அழிவாயுதங்களைத் தேடும் பணியிலிருந்து விலகி, வன்முறையாளர்களுக்கு எதிராகப் போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமெரிக்கப் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - ஈராக்கில் பணிபுரியும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை ஆகியன தமது பணியாளர்களை குறைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன.

### ஒஸாமா குழுவினரின் கப்பல் குன்சார் துறைமுகத்தை சென்றடைந்தது

ஒஸாமா பின்லாடனின் -அல் - கொய்டா அமைப்பினரை ஏற்றிக் கொண்டு கப்பலொன்று தென் கொரியவின் குன்சார் துறைமுகத்தை அடைந்துள்ளதாக அந்நாட்டரசு அறிவித்துள்ளது.

பனாமா கொடியுடன் அதெனா என்ற பெயர்கொண்ட இக்கப்பல் மரங்களை ஏற்றிக்கொண்டு வந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 70 போர்வீரர்களுடன் புலனாய்வுத்துறையினரும் கடற்கரையில் காணப்பட்டதாகவும், ரோந்துப் படகொன்று கடலில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்ததாகவும் தென்கொரியாவின் தேசிய புலனாய்வுத்துறை தெரிவித்தது. தகவலை யார் கொடுத்தார்கள் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பவற்றைத் தெரிவிக்க புலனாய்வுத்துறை அதிகாரி மறுத்துவிட்டார்.



கலிபோர்ணியாவில் பரவும் காட்டுத் தீயினைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தீயணைப்பு படை வீரர் ஒருவரைக் காணலாம்.

## உலக நோக்கு

# ஐக்கிய நாடுகள் சபை ஈராக்கிலிருந்து தனது பணியாளர்களை மீள அழைப்பு!



ஐக்கிய நாடுகள் சபை கடந்த வியாழனன்று பக்தாத்திலிருந்து தனது பணியாளர்களை திரும்ப அழைத்துள்ளது. மேலும் சர்வதேச உதவி நிறுவனங்கள் தாம் தொடர்ந்து ஈராக்கில் நிலைகொண்டிருப்பது தொடர்பாக விவாதித்துள்ளன. தமது பாதுகாப்புத் தொடர்பாக பேசுதவற்காகவே நாட்டை விட்டு வெளியேறுவதாக ஐ.நா.சபை அதிகாரியொருவர் தெரிவித்தார்.

60 சர்வதேச அதிகாரிகள் ஈராக்கில் இருப்பதாக நியூயோர்க்கில் உள்ள அமெரிக்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அநேகமானவர்கள் ஈராக்கின் வட பகுதியில் கடமையாற்றுவதாகவும் அவர்கள் அகற்றப்படவில்லை எனத் தெரிவித்தார். அத்துடன் செஞ்சிலுவைச் சங்கமும் ஒரு பகுதியினரைத் திருப்பியழைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# முஸ்லிம்கள் மீதான தாக்குதலை கண்டித்து கிழக்கில் இன்று ஹர்த்தாலுக்கு அழைப்பு!

## தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு

(திருகோணமலை)

திருகோணமலையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளை நிறுத்தக்கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகம் இன்று, கிழக்கு மாகாணத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்கள். முஸ்லிம்களின் உயிர், உடமை, பாதுகாப்பு போன்ற விடயங்களில் அக்கறையற்றிருக்கும் அரசைக் கண்டித்தும், முஸ்லிம்-தமிழ் - சிங்கள உறவினைச் சீர்குலைத்து, அதன்மூலம் தமது நலன்களை அனுபவிக்க முயலும் சக்திகளுக்கெதிராகவும், முஸ்லிம் அரசியல் தலைமைகள் தமது சொந்த நலன்களை விடுத்து சமூகநலன்கள் மீது அதிக அக்கறை செலுத்தக் கோரியுமே, இன்று ஹர்த்தால் நடைபெறவுள்ளது.

இன்று முழுநாளும் அனைத்து வர்த்தகர்களும் தமது வியாபார ஸ்தலங்களை மூடியும், அரச அலுவலகங்கள் இயங்காமலும் மூடி கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும், போக்குவரத்துக்களை ஸ்தம்பிதமடையச் செய்தும் ஹர்த்தால் வெற்றியடைய பூரண ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என, அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (07)

## நாற்சந்தி

'தமிழ்மக்கள் மீது திணிக்கப்படுகின்ற அனைத்து அடக்குமுறைகள் வன்முறைகளுக்கு எதிராக, இறுதி மூச்சுவரை பாடுபடுவேன்' இவ்வாறு தமிழ் - சிங்கள கலைக்கூடல் நிகழ்வில் துணிச்சலாக கருத்து வெளியிட்டிருப்பவர் சிங்களப் பேராசிரியர் சுசரித ஹம்லத் அவர்களே...இவரைப்போன்று மனிதாபிமானரீதியில் குரலெழுப்பிய சிங்கள அரசியல்வாதிகள், கலைஞர்கள், அறிவுஜீவிகள் பலரை நாம் நன்கு அறிந்து வைத்துள்ளோம்.

அவர்களின் மனோதர்ம செயற்பாடுகளை மதிக்கிறோம். நன்றி! ஆனால், அவர்களின் தார்மீக உணர்வுக் குரலுக்கு பெரும்பான்மை சமூகம் எந்தளவு கௌரவத்தை கொடுத்துள்ளது என்பதுதான் கேள்வி.

பெரும்பான்மை இன சமூகத்தவரிடையே மனிதாபிமானம் எடுபடும் அளவுக்கு மனிதாபிமானக் குரல்கள் எடுபடாமல் போனதுதான் இன்றைய இன விவகாரத்திற்கே மூலகாரணம்.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் இதனை நன்கு உணரமுடியும்!

இப்போதெல்லாம் சிறிலங்காவின் இனவாதிகள் மனிதாபிமானிகளுக்கு 'தேசத் துரோகிகள்' என்ற பட்டம் சூட்டியே கௌரவிக்கிறார்கள்.

பாவம் 'சுசரித ஹம்லத்'திற்கும் அதே பட்டந்தான் கிடைக்கப்போகிறது என்பதுதான் கவலைக்குரியதாகும்...

'சிஹல உறுமய்க்காரர் கூறுவதற்கெல்லாம் எதிரான கருத்தெதுவோ அதுவே சரியான கருத்தென்கிறார்' ஒரு அரசியல் விஞ்ஞான மாணவன்.

அதுவும் சரிதான்!

தெருவாசி

## திருமலை இறால்குழி...

மன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பத்திரிகையாளர் மாநாடொன்றினை நேற்றையதினம் 3.30 மணிக்கு நடத்தினார். அவர் அங்கு தெரிவித்ததாவது,

குறுகிய அரசியல் இலாபங்கொண்ட குழுவினர் - புலிகள் மீது பழிசுமத்தி, தமிழ் இளைஞர்களின் ஆவேசத்தைத் தூண்டுவதற்கு இவ்வாறான செயலில் இறங்கியுள்ளனர். இந்தச் செயற்பாடுகளால், தமிழ் இளைஞர்கள் வன்முறையில் இறங்காது பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இடைக்கால திட்டவரைபு தொடர்பாக புலிகள் பிரேரணைகளை இன்று கையளிக்கவுள்ளனர். மறுநாள் இதனைப் பகிரங்கமாக வெளியிடவும் உள்ளனர். இந்த நேரத்தில், இவ்வாறான சம்பவங்களைச் செய்துவிட்டு, புலிகள் மீது பழிபோட முயற்சி செய்வதை - திட்டமிட்ட சதியென்றே நாம் நினைக்கின்றோம்.

இவ்வாறான சதியில், தமிழ் இளைஞர்கள் சிக்கக்கூடாது என கேட்டுக் கொண்டார். தமிழ் இளைஞர்கள் ஆத்திரமடைந்து வன்முறையில் ஈடுபட்டால், பழி புலிகள் மீதே சுமத்தப்படும். இதன்மூலம் இந்தச் சதிகளில், ஈடுபட்டவர்களின் நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறும்.

இக்கட்டான இந்த முக்கிய கால கட்டத்தில், நாட்டின் அரசியல் சரித்திரத்தை மாற்றும் சூழலை தமிழ் மக்கள் குலைக்காமல், மிக நிதானமாகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ளவேண்டும்.

மூதூர் பிரதேசத்தில் பாதுகாப்பு நிலவரம் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எனவே - இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த சமூகப்பெரியார்கள் கூடி நடவடிக்கை எடுப்பதன் மூலம் வன்முறையில் ஈடுபட்டுள்ளோரை ஓரம் கட்டமுடியும்.

20 வருடமாக நாட்டில் நடைபெற்ற யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர - அரசுடன் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்தும் இந்த வேளையில், இந்தச் சமாதான முயற்சியைக் குழப்ப யாராவது முன்வந்தால், அதைச் சமூகம் ஓரங் கட்ட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில், நாடாளுமன்ற உறுப்பினர் க. துரைரட்ணசிங்கமும் உடனிருந்தார். (04,10)

## புலிகளின் இடைக்கால...

சிக்குச் செல்லவிருப்பதாகவும், இன்று அரசாங்கத்திடம் கையளிக்கவிருப்பதாகவும், கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார்.

இவற்றின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அனுப்பப்படும். அரசாங்கம் விடுதலைப் புலிகளின் யோசனைகளை ஆராய்ந்து, நாளை அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க இருக்கின்றது.

இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபின் மற்றுமொரு பிரதியை - நாளை காலை லண்டனில் வைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் கையளிப்பார் என பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் அடுத்த மாதம் 10 ஆம் திகதி இலங்கை வருகின்றார். இதன்பின்னர் - இது தொடர்பான மற்றுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெறும். இவற்றின் அடிப்படையில், கூடிய விரைவில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசாங்கம் நோர்வேயிடம் வேண்டுகோள் விடுக்க இருக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த அமைச்சர் பீரிஸ், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரைத் திருப்பி அழைக்குமாறு நோர்வேயிடம் வேண்டுகோள் விடுக்கமுன்னர் - ஜனாதிபதி, அரசாங்கத்தின் கருத்துக்களைக் கேட்டிருக்கலாம். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சரிடம்கூட இந்த விடயங்கள் குறித்து, ஆராய்ந்திருக்கலாம். எனினும், இந்தப் பிரச்சினை தொடர்பாக, இறுதித்தீர்வு நோர்வே அரசாங்கத்தாலேயே தெரிவிக்கமுடியுமென அமைச்சர் குறிப்பிட்டார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பாதுகாப்பு படைகளுக்கு உத்தரவு வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கவில்லை. இதனால், கண்காணிப்புக்குழுவின் பணிப்புரைகளுக்குக் கீழ்ப்படியக்கூடாதென ஜனாதிபதி பாதுகாப்புப் படைகளுக்கு விடுத்த உத்தரவு பற்றி கேள்வியெழமாட்டாது எனவும் சொன்னார். (01)

### பிரதமர்....

யேயான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையொன்றுக்கான அடித்தளத்தை உருவாக்குவது பற்றி - இந்த விஜயத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும், பேராசிரியர் பீரிஸ் தெரிவித்தார். (01)

### சூழப்பத்தை....

நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவித்ததார்.

நாட்டில் நிலவும் அமைதி முயற்சியை சீர்குலைக்க மேற்கொள்ளும் முயற்சியென அமைச்சர் இதனை வர்ணித்தார்.

இந்த நிகழ்வுக்கு பாதுகாப்பு தேவைப்படாதது என, ஏற்பாட்டாளர்கள் கருதியதனால் - குறைந்த பொலிஸாரே பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர் என, கொழும்பு பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

இருந்தபோதிலும், பொலிஸார் மேற்கொண்ட கடமைகள் பற்றி, தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்படி, சிஹல உறுமயவின் பேச்சாளர்கள் குழப்பங்களில் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது எனவும் தெரிவித்தார்.

### சிங்கள....

உறுமயக் கட்சியைச் சேர்ந்தவர்கள் நேற்று கறுவாத்தோட்டப் பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக, கைது செய்யப்பட்ட சிஹல உறுமயக் கட்சியைச் சேர்ந்தவர்களை விடுவிக்கக்கோரியே, நேற்றைய தினம் பொலிஸ்நிலையம் முன்னால், அந்தக் கட்சி ஆதரவாளர்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ரெலவ்சன்.....

கண்காணிப்புக்குழுவில், இந்த நாடுகளைச் சேர்ந்தோரே அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நிலைநாட்டப்பட்டதால் ஏற்பட்ட சிக்கல்கள், தற்போதைய நிலவரங்கள் போன்ற விடயங்களை இந்த நாடுகள் கூட்டாகப் பரிசீலனை செய்யும். அவற்றில் கலந்துகொள்வதற்காக ரெலவ்சன் திருப்பி அழைக்கப்பட்டிருக்கிறார் என, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் தெரிவிததார்.

எவ்வாறாயினும் - இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகிய இருதரப்புக்களின வேண்டுகோளுக்கு அமைவாக - சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில், நோர்வே திடசங்கற்பம் பூண்டுள்ளது. இந்த வேண்டுகோளுக்கமைவாக, கண்காணிப்புக்குழு தொடர்ந்தும் போர்நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கத்தை கண்காணிக்கும் என நோர்வே வெளிவிவகார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (01)

## நிமலராஜன் படுகொலை சந்தேக நபருக்கு அடுத்த மாதம் 20 வரை விளக்கமறியல்

பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான சந்தேகநபரை அடுத்த மாதம் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு, யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நிமலராஜன் படுகொலை தொடர்பாக, நேற்று யாழ். நீதிமன்றில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது, திருகோணமலையில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரான எஸ்.உதயபாலன் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிபதியுடன் தாம் இரகசிய வாக்குமூலம் அளிக்க விரும்புவதாக திருகோணமலையில் வைத்து குற்றப் புலனாய்வு பொலிஸாரிடம் அவர் தெரிவித்தார். இவர் கொடுத்த வாக்குமூலம் தொடர்பாக நீதிமன்றில் விசாரித்தபோது, தான் வாக்குமூலம் கொடுக்கவிரும்பவில்லையென நீதிமன்றில் தெரிவித்தார். (111)

## அச்சுவேலிப் பகுதியில்...

மோதியது. இதன்போது அதிலிருந்த இருவரும் படுகாயமடைந்தனர்.

சாரதி அந்த இடத்திலேயே சுயநினைவிழந்துவிட்டார். சம்பவ இடத்துக்கு வந்த பொதுமக்கள், படுகாயமடைந்த இருவரையும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக, அம்புலன்ஸ் வண்டி மூலம் - யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

கடுமையாக சேதமுற்ற லான்ட் மாஸ்ரரும், விபத்துக்குக் காரணமான இராணுவ வாகனமும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் உள்ளன.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வந்த இராணுவ அதிகாரிகள் - அருட் சகோதரியிடம் சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரினர். பாதிக்கப்பட்ட திருக்குடும்ப இல்லத்துக்குச் சொந்தமான லான்ட்மாஸ்ரரை திருத்தித் தருவதாகவும், அதுவரை தமது வாகனம் ஒன்றைத் தருவதாகவும் உறுதியளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111)

நமது ஈழநாடு நடாத்தும்

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2003 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச முன்னோடிக் கருத்தரங்கு

இடம்: யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபம்

காலம்: 2003.11.02 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம்

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை வழங்குவோர்


ஹரிஹரனன் பிறிண்டேர்ஸ்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

SEYLAN BANK LIMITED
செலான் வங்கி
டிக்கிரி கணக்கு
புதிதாக டிக்கிரிக் கணக்கு ஆரம்பிக்க விரும்புபவர்கள் கருத்தரங்கு மண்டத்தில் ஆகக்குறைந்தது 100 ரூபா செலுத்தி ஆரம்பிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

BANK OF CEYLON
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

யாழ் நகரில்
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்..!!!!!
1.பழுதடைந்த பழைய படங்களை நவீன முறையில் புதுப்பித்து மெருகூட்டல்
2.நெகட்டிவ் இல்லாமல் படத்தில் இருந்து படத்தைப் பிரதியாக்கம்செய்தல்
3.டிஜிட்டல் கமராவில் இருந்து எடுக்கப்படும் படங்களைப் பிரதியாக்கம் செய்தல்
4.அல்பத்திற்கான முகப்பு அட்டைப்படங்களைத் தயாரித்தல்
ஆகிய சேவைகளை வாடிக்கையாளர்களின் நன்மை கருதி விஸ்தரித்துள்ளது.
Vista Vision
விஸ்ட்டா விஷன் டிஜிட்டல் கலர் லாப்,
52,பலாலி வீதி,யாழ்ப்பாணம்.
☎:021-2225187




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.